★ ★
Registered as a Newspaper in Ceylon
விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசீய தினசரி
National Tamil Daily
வரி 8 (14-8-86) இதழ் 185

பராபவ ஆடி 29 ரபீ: ஆகி 26 ஞாயிற்றுக்கிழமை

15 தினங்களில் 35 குழந்தைகள் வயிற்றோட்டத்துக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணத்தில் வயிற்றோட்டநோய் பரவிவருகிறது. பத்துவயதுக்குட்பட்ட குழந்தைகளையே இந்நோய் இப்பொழுது கடுமையாக வருத்துவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தினசரி மூன்று நான்கு குழந்தைகள் வயிற்றோட்ட நோய்க்குப் பலியாகிவருவதாக அறியப்படுகிறது சென்ற இரண்டுவாரங்களுக்குள் சுமார் முப்பத்தைந்து குழந்தைகள் இந்த நோய்க்குப்பலியாகியுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாடின் பல பகுதிகளிலும் இந்நோய் தீவிரமாகப் பரவிவருவதாகவும் இந்நோயைத் தடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் பெற்றோர் பீதியடைந்துள்ளனர்.

ஜவுளி கூப்பன் விரைவில் நீங்கும்

கட்டுப்பாட்டுத்திட்டம் பற்றி அமைச்சு பரிசீலனை

கொழும்பு, சனி

ஜவுளிகளை பங்கீட்டு முறையில் விற்பனை செய்யும் திட்டம் பற்றியும் கட்டுப்பாட்டு முறை அழல் செய்யத் தொடங்கியதிலிருந்து தோற்றியுள்ள குழப்ப நிலை பற்றியும் வர்த்தக அமைச்சு இப்பொழுது தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகிறது.

ஜவுளி கையிருப்புப் பற்றியும் இனி இறக்குமதி செய்யப்படவிருக்கும் ஜவுளிகளின் தொகை பற்றியும் அமைச்சு பரிசீலனை செய்யவிருக்கிறது

சிலரகத்துணிகளுக்கு கூப்பன் புள்ளி கொடுத்து வாங்க வேண்டுமென்றும் மற்றும் சிலரகத்துணிகளுக்கு கூப்பன் புள்ளி அவசியமில்லையென்றும் புதிய திட்டம் வகுக்கப்பட்டதன்மூலம் தோன்றியுள்ள நிலை பற்றியும் வர்த்தக அமைச்சு பரிசீலனை செய்து வருகிறது.

விரைவில் அதாவது இன்னும் மூன்று மாதங்களுக்குள் கூப்பன் புள்ளிகளுக்கு துணிகள் விற்பனை செய்யும் பங்கீட்டு முறையை ரத்துச் செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக ஓர் அதிகாரி தெரிவித்தார்.

ராணுவம் அகற்றப்படுகிறது

கோலாலம்பூர் ஆக 13
இந்தோனேஷிய வுக்கும் மலேஸியாவுக்கு மிடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திதாகியுள்ளதைத் தொடர்ந்து இந்த இரண்டு நாடுகளின் எல்லைகளிலுமுகாமிட்டிருந்த பிரிட்டிஷ் ஆஸ்திரேலியராணுவங்கள் அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

25 பேர் பலியாயினர்

மெல்போன், அக் 13
இங்கு ஒரு ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 25 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது இவர்களில் பெரும்பான்மையானவர்கள் தீயினால் சூழப்பட்டு மூச்சுத்திணறி உயிர் விட்டதாகக் கூறப்பட்டது.

25 எம். பி.க்களுடன் ஜே. ஆர். வருகிறார்

யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்

கொழும்பு, சனி

மாவிட்டபுரத்தில் இம் மாதம் 21-ந் திகதி முதல் 23-ந் திகதிவரை நடைபெறும் தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டில் கலந்துகொள்ளவரும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவுடன் மற்றும் உதவி மந்திரிகள், அரசாங்க எம் பி க்கள் சிலரும் வருவர்.

சுமார் இருபத்தைந்து பேரடங்கிய இக்கோஷ்டியினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று தினங்கள் வரை தங்கியிருப்பார்கள் எனவும் யாழ்ப்பாணப் பகுதியில்உள்ள சில தொகுதிகளுக்கு விஜயம் செய்வார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உதவி மந்திரிகளுடன் வரும் திரு ஜயவர்த்தனவுடன் தொகுதிகளுக்குச் சென்று தொகுதி மக்களின் குறைகளை நேரில் அறிந்துகொள்வார்கள்.

துணிவழங்க மறுக்கப்படாது

கொழும்பு, சனி

கூப்பன் புள்ளிகளை சமர்ப்பித்து பாவனையாளர்கள் துணிகள் கேட்கும்போது கூப்பனுக்குள்ள துணிகளில் ஒரு புள்ளிக்கு இரண்டு வார வரை துணிகள் வழங்க வர்த்தகர்கள் தயாராய் இருக்கவேண்டும் என்று வர்த்தக அமைச்சு அறிவித்திருக்கின்றது.

டெஹெரான், ஆகஸ்ட் 13
இங்கு ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக ஐந்து பேர் உயிரிழந்தனர். பல வீடுகள் அழிக்கப்பட்டன. பயிர்களும் பெருமளவில் நாசமாகின. (பி. டி. ஐ)

யார் யார் மோட்டார் காருக்கு மனுச்செய்யலாம்?

கஸட் மூலம் தெரிவிக்கப்பட்டவிபரம்

கொழும்பு, சனி

மோட்டார் கார் யார் யாருக்குக் கிடைக்கும். கார் வாங்குவதற்கு யார் யார் விண்ணப்பம் செய்யலாம்? கஸட் அறிவித்தலில் இதற்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. மோட்டார் கார் இல்லாதவர்களும் இப்பொழுது பாவிக்கும் கார் 1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதிக்குமுன் பதிவு செய்யப்பட்டதாயுமிருந்தால் புதிய காருக்கு விண்ணப்பிக்க அருகதையுடையவர்கள்.

டாக்டர்கள், தனிப்பட்ட தொழில்புரியும் ஆயுர்வேத வைத்தியர்கள், தேயிலை, ரப்பர், தென்குத் தோட்டத் துரைமார்களும், தோட்ட ஏஜண்டுகளும், வாடகைக்கார் சொந்தக்காரர்கள், என்ஜினியர்கள், தனியார் துறையிலுள்ள கட்டிடக் கலைஞர்கள், சிற்பிகள், வருடம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இலாபம் பெறும் வர்த்தகத்துறையிலுள்ளவர்கள் தொழில் துறையிலுள்ளவர்கள் ஆகியோர் மோட்டார் கார் வாங்க மனுச்செய்துகொள்ளலாம்.

இவ்வகைதம் வாங்கும் இந்தக் கார்களைவிற்கமுடியாது. மாற்றமுடியாது, ஐந்து வருட காலத்துக்குள் வாடகைக்கும் விடமுடியாது.

இந்தவிதிமுறைகளின் கீழ் மோட்டார் கார்களை வாங்கும் எம். பி.க்களும் சௌட்

(5-ம் பக்கம் பார்க்க)

'ஜனநாயகத்தை காப்பாற்றினேன்'

எதிர்க்கட்சி வசைமாரி பற்றி கவலையில்லை

— சி. பி. டி. சில்வா

கொழும்பு, சனி

வரவு-செலவுத்திட்டவிவாதத்தில் கலந்துகொண்டு நேற்று எதிர்க்கட்சியினரின் வாதங்களுக்கு பதிலளித்து காணிநீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா பேசினார்.

பழைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு நான்காரணமாய் இருந்தேன் என்று எதிர்க்கட்சியினர் என்னை வைகிறார்கள். ஆனால் அவர்களின் வசைமாரிக்கெல்லாம் நான் கவலைப்படப் போவதில்லை என்றார்.

நாடு படுமோசமான ஒரு நிலையை நோக்கிப்போய்க் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சநாள் போய்இருந்தால் சர்வாதிகாரம் தலை தூக்கி இரத்தக்களறிகூட ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கும். ஆனால் அந்த நிலையில் இருந்த நாட்டையும் ஜனநாயகத்தையும் நான் காப்பாற்றிவிட்டேன். என்று திரு. சி. பி. டி. சில்வா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் எஸ். எஸ். ஸி. யமிற்ற இளைஞர்களுக்கான குடியேற்றத்திட்டம் பற்றிக் குறிப்பிட்டார். இந்தக்குடியேற்றத்திட்டத்தில் 15ஆயிரம் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த இளைஞர்கள் குடியேற்றப்படுவார்கள் அவர்களின் பிரச்னை ஒருவாறு நீங்கி அதேசமயம் அந்த வாலிபர்கள் ஒவ்வொருவரும் தமக்கு துணைவிகளைத் தேடிக்கொள்வார்கள் அதன்மூலம் நாம் திட்டம்போடாவலே இன்னும் 15 ஆயிரம் இளம்பெண்களின் பிரச்னையும் தீர்ந்துவிடமுடியும் என்று திரு. சி. பி. டி. சில்வா கூறினார்.

சிவசுப்ரமண்யம் புதிய உயர் நீதிபதி

கொழும்பு, ஞாயிறு

திரு. வி. சிவசுப்ரமண்யத்தை சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக கவர்னர் ஜெனரல் நியமித்திருக்கிறார்.

வருகிற 16-ம் திகதி முதல் அவர் புதிய பதவியில் கடமையாற்றுவார்.

திரு. சிவசுப்பிரமண்யம் முன்பு அசைஸ் கமிஷனராகவும், நீதிமந்திரியின் நிரந்தரக் காரியதரிசியாகவும், கொழும்பு மாவட்ட தற்காலிக நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14 டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

நீர்வேலி, உரும்பராய், ஊரெழு கிராமச்சபை
சோலைவரி அறிவித்தல்

மேற்படி கிராமச்சபை எல்லைக்குள் வசிக்கும்பொது மக்களுக்கு அறியத்தருவது யாதெனில் கீழ் கூறப்படும் திகதிகளுக்கு முன் கிராமச் சபைக்கு செலுத்த வேண்டிய சோலைவரிப் பணம் யாவும் இக் கிராமச்சபை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டுபெற்றுக் கொள்ள வேண்டும். தவறின் கிராம சமுதாயச் சட்டம் 59-ம் பிரிவின்படி நடவடிக்கையெடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

விபரம்:

1. 1962-ம் ஆண்டு 4-ம் கால் வருடம் தொடக்கம் 1964-ம் ஆண்டு 4-ம் கால் வருடம் வரை கிராமச் சபைக்கு செலுத்த வேண்டிய சோலைவரிப் பணம் யாவும் 15-10-66 க்கு முன் செலுத்தல் வேண்டும்.

2. 1966-ம் ஆண்டு 1-ம் கால்வருடம் தொடக்கம் 1966-ம் ஆண்டு 4-ம் கால் வருடம் வரை செலுத்த வேண்டிய சோலைவரி யாவும் 15-12-66 க்கு முன் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பு

வியாழக் கிழமைகளிலும், வெள்ளிக் கிழமைகளிலும் உரும்பராய் சந்திக்கருகாமையிலுள்ள ஞானோதய சனசமூக நிலையத்திற்கு வரும் இ. ச. உத்தியோகஸ்தரிடம் வரிசெலுத்தலாம்.

— க. குலசிங்கம்,
தலைவர் கிராமச்சபை,
நீர்வேலி.

921 11-8-66.

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

உள்ளூராட்சி என்ஜினியர் கோரிக்கை

கொழும்பு, சனி

உள்ளூராட்சிச் சேவையிலுள்ள மின்சார ஊழியருக்கு ஓர் பாதுகாப்பு அலவன்ஸ் தருமாறு உள்ளூராட்சி மின்சார என்ஜினியர் சங்கம் உள்ளூராட்சி சேவைக் கமிஷனைக் கேட்டுள்ளது. எல்லா அரசாங்க ஊழியர்க்கும் இத்தகைய அலவன்ஸ் அளிப்பதென்ற அரசாங்கக் கொள்கைக்கிணங்கவே தமது கோரிக்கையும் விடப்பட்டுள்ளதென அவர்கள் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். மின்சார வேலை இலாகாவின் வெளிவேலைகளில் ஈடுபடும் எல்லா ரகத்தொழிலாளர்களுக்கும் கடந்த இரண்டு வருடங்களாக இந்த அலவன்ஸ் அளிக்கப்பட்டு வருகிறதென்றும், அத்தொழிலாளர் போன்றே தாமும் தமது வேலைகளில் ஈடுபடும்போது ஆபத்துக்களுக்காளாக வேண்டிய நிலைமை இருந்தும், தமக்கு இத்தகைய அலவன்ஸ் மறுக்கப்பட்டுள்ளதென்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6.30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
கப்பலோட்டியதமிழன்

REGAL—JAFFNA
NOW SHOWING
Richard Chamberlain
Yvette Mimieux
in
Joy in the Morning
(M.G. M'S Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி -2-30, 6-03, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
Hariyhli our Rasta
ஹரியாலி ஓர் ரஸ்தா
(ஹிந்தி)

வானொலி

கொழும்பு
14 - 8 - 66 ஞாயிறு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீட்டர்&49 மீட்டர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிறீன்தவ ஆராதனை, 7-30 மன்ற நாடக விழா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நிலைய ஒலிப்பதிவுகள், 10-00 மாதர் கேட்டவை.

யாழ்ப்பாணத்தில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி

கொழும்பு, சனி

அடுத்த வருட இறுதிக்குள்ளாக ஒரு கோடி ரூபா செலவில் நான்கு ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் கட்டப்படவிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் ஓர் ஆயுர்வேத ஆஸ்பத்திரி கட்டும் அரசாங்கத் திட்டத்தின் அம்சமாக இந்நான்கு ஆஸ்பத்திரிகளும் பெலியத்த, குருணாகலை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிறுவப்படும்.

ஏற்கெனவே மூன்று ஆஸ்பத்திரிகள் கொழும்பு, அனுராதபுரம், இரத்தினபுரி ஆகிய இடங்களிற் செயற்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர் ஆஸ்பத்திரி கட்டுவதற்காக முடிக்குரிய காணியைக் கொடுத்திருக்கிறார். திட்டங்களும் தயாரிக்கப்பட்டு முடிவடைகின்றன.

வியாபாரம் பெருக விளம்பரம்செய்க

இரண்டு பாம்பில் ஒன்று..

உடுப்பிட்டி, சனி

கரணவாய்வடக்கு சாளம்பன் என்னுமிடத்திலுள்ள கிருஷ்ணபிள்ளை என்பரின் எட்டு வயது மகனான ஈசுவரன் பாம்பினால் கடியுண்டு அபாய நிலையில் மானிப்பாயில் விஷகடி வைத்தியசாலையிடம் சிகிச்சைபெற்றுவருகின்றார். வீட்டினுள் புகுந்த இரண்டு பாம்புகளைக் கொல்லும் முயற்சியில் தந்தை ஈடுபட்டிருந்தபொழுது அருகில் நின்று பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு பாம்பு சிறுவனைத் தீண்டிவிட்டு ஓடிவிட்டது. மற்றப் பாம்பு அடித்துக்கொல்லப்பட்டது

மாத்திரைகளின் துர்ப்பிரயோகம்

ஜெனீவா, ஆக. 13

உறிசாகமூட்டும் மாத்திரைகள், இதமளிக்கும் பில்லைகள் போன்ற மாத்திரைகள், பிலிகைகள் ஆகியவற்றின் துர்ப்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துமாறு உலக அரசாங்கங்களை இங்கு ஜெனீவாவில் கூடிய 10 நாடுகளடங்கிய விசேஷ குழுவொன்று கேட்டுள்ளது. சில நாடுகளில் இளைஞர்களிடையே இந்தத் துர்ப்பிரயோகம் தொற்று நோய்போல் பரவுவதே இக்கோரிக்கைக்குக் காரணமாகும். இக்குழுவில் இந்தியாவும் ஓர் அங்கத்துவ நாடாகும். (பி. டி. ஸி.)

— —

கொழும்பு, சனி

விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 16-ம் தேதி நுவெரெலியாவில் ஆரம்பமாகும். இருவார காலம் வரை நடைபெறவிருக்கும் இந்தப் பயிற்சி வகுப்பில் நாட்டிலுள்ள சகல கல்லூரிகளையும் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்துகொள்ளார்கள். இம்மாதம் 30-ம் தேதி வரை இந்தப் பயிற்சிவகுப்பு நடைபெறும்.

வைத்தியம்

நொய்வு, கசம், நீரிழிவு, பிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். வகுப்புகள்:-

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

50 கால் நடைகள்
70 ஆடுகள்

பரிசு பெற்றவையும், வனப்பும், ஆரோக்கியமும், நல்ல இனமும் கலப்புமுள்ள 50 கால் நடைகளும் (பால் மாடுகள், கேப்பைகள், எருதுகள், வண்டி மாடுகள், கொழும்பு ஆடிவேல் ரதமிழுக்கும் பொருத்தமான ஒங்கோல் இன காளைகள்) 70 ஆடுகளும் (வளர்ப்புக்கு மிக உகந்த நேர்த்தியான ஜம்னாபாரி கலப்பு இனங்கள்) 23-8-66 செவ்வாய்க்கிழமை, (போயாதினம்) வதுமுன்னகெதரையிலுள்ள நாக தோட்டத்தில் ஏலத்தில் விற்கப்படும். யக்கில, மகந்துர வெலிபென்ன கஹாமுல்ல, உடுபத்தல ஆகிய இடங்களிலிருந்து ரூட் மூல வரலாம். B. W. D லம்பேட் & கோ, ஏலவிற்பனையாளர், தரகர், மதிப்பாளர், நீர்கொழும்பு, தொலைபேசி: 362.

845

காணி

கீரிமலை கருகம்பனை வீதியில் ஒரு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு, க. சின்னத்துரை, தேனிப்பாது காவலர், கீரிமலை. 846

கல்வி

மாணவ ஆசிரியர்:

மேற்படி பரீட்சைக்கு 15-8-66-ல் இருந்து குறைந்த கட்டணத்துடன் முழு நேர வகுப்பு ஆரம்பமாகின்றது. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 841

பிரவேசங்கள்

ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் வகுப்புகளுக்கு இப்பொழுது பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்குத் தனி விடுதி வசதி உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 826

தாய்லந்து, ஆக. 13

பலகோடி டொலர் பெறுமதியான இராணுவ விமானத் தளமொன்றை அமெரிக்கா தாய்லந்துக்கு அளித்துள்ளது. (பி. டி. ஸி.)

விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்)

சிவாஜி, எஸ். எஸ். ஆர்.,
எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
மற்றும் பலர் நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்

பழநி

இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
திரைக்கதை - டைரக்ஷன் பீம்சிங்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சிவாஜி - சரோஜா தேவி நடித்த
பாகப்பிரிவினை

எதிர்பாருங்கள்!!
யாழ். நகரமண்டபத்தில்
15—8—66 முதல் 19—8—66 வரை
தினசரி பி. ப. 6—30 மணிக்கும் 9—30 மணிக்கும்
— தேவ் & தேவ் அளிக்கும் —
பாச நிலா
யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட
முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்
(பாதி கலரில் -காந்தஒலி)
(Processed in Germany — Sound Striped in Canada)
நடிகர்கள்:
செல்வராஜன் - ரஞ்சி செல்வராஜன்
மனோகரன், ஜெயந்திரா
ஜடா தேவேந்திரன்
முதலியோர்
டிக்கட்: 6-30 மணிக் காட்சிக்கு ரூபா 5, 3, 2.
9-30 மணிக் காட்சிக்கு ரூபா 3, 2,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸரவாக், ஸபா பகுதிகளிலிருந்து பிரிட்டிஷ் துருப்புக்களின் வாபஸ் ஆரமபம்

மலேஷிய எதிர்ப்பு முடிவுற்றதை தொடர்ந்து நற்பலன்கள்

கோலாலம்பூரில் இடம்பெறும் கோலாகலமான கொண்டாட்டங்கள்

லண்டன், ஆகஸ்ட் 13

இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்குமிடையேயான சமரச உடன்படிக்கையைத் தொடர்ந்து ஸரவாக், ஸபா ஆகிய பகுதிகளிலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் வாபஸ் பெற ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் சில மாதங்களுக்குள் வாபஸ் பூர்த்தியடையும்.

துருப்புக்களுடன், பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களும் வாபஸ்பெறத்தொடங்கியுள்ளன.

மலேஷிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் இந்தக்கவலை கோலாலம்பூரில் நேற்று வெளியிட்டார்.

பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் பதிலாக மலேஷிய பாதுகாப்புப் படைகள் இப்பிராந்தியங்களில்பொறுப்பேற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி நேற்று கோலாலம்பூரில், தேசிய வைபவம் ஒன்றில் பேசியபோது ஸரவாக், ஸபா ஆகிய பிரதேசங்களில் பொதுத் தேர்தல் நடத்துவதன்மூலம் ஏற்படும்முடிவை இந்தோனேஷியா ஏற்றுக் கொள்ளும் என அறிவித்தார். மலேஷியா-இந்தோனேஷியா ஆகிய இருநாடுகளும் வெளி அபாயத்தைத் தவிர்க்க கூட்டாகச் செயல்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இருநாடுகளுக்குமிடையே விரைவில் ராஜிய உறவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவைபவத்தில் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும் பேசினார். இந்தோனேஷியா மீண்டும் ஐ.நா.வில் சேர்க்கும் விஷயமாக முயற்சி செய்வதில் மலேஸியா மகிழ்ச்சியடையும் என்றார் துங்கு.

மலேஸிய எதிர்ப்புக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதை மலேஸிய மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடினார்கள்.

டாக்டர் மஸிக், துங்கு அப்துல் ரஹ்மான் ஆகிய இரு தலைவர்களும் இரு நாட்டு மக்களுக்கும் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

வெள்ளத்துக்கு 19 பேர் பலி

லக்னோ, ஆகஸ்ட் 13

பெருமழை காரணமாக உத்தரப்பிரதேசத்தில் 19 பேர் மாண்டனர்.

பெர்லின் சுவருக்கு 5 வயது

கி. பெர்லின், ஆக. 13

கிழக்கு பெர்லின் சுவர் எழுப்பப்பட்ட 5-வது ஆண்டு தினம் இன்று கிழக்கு ஜெர்மனியில் கொண்டாடப்பட்டது. மேற்கு ஜெர்மன் தலைவர்கள் இதற்குக்கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

புதிய விடுதி இலலங்கள்

கண்டி, சனி

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனைப் பகுதியில் நான்கு கூடுதலான இல்லங்கள் கட்டப்படவிருக்கின்றன. ஒவ்வொரு புதிய விடுதி இலமும் 200 மாணவரைக் கொள்ளக்கூடியதாக அமையும்.

61 நாடுகள் எதிர்ப்பு

நியூயோர்க், ஆகஸ்ட் 13

தென்மேற்கு ஆபிரிக்கா விஷயமாக உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி ஐ. நா. விலுள்ள 61 ஆசிய ஆபிரிக்க நாடுகள் கேட்டுக்கொண்டிருக்கின்றன உலக நீதிமன்றத் தீர்ப்பை அவை எதிர்த்துள்ளன.

மீன்பிடிகாரரைக் காணவில்லை

டோக்கியோ, ஆக. 13

இங்கிருந்து 1000 மைலுக்கப்பால் ஜப்பானிய மீன்பிடி வளமொன்றும் மேற்கு ஜெர்மன் சாமான் கப்பலொன்றும் மோதியபின், நான்கு ஜப்பானிய மீன்பிடிகாரரை காணவில்லை. (பி.டி.ஸி.)

வியட்னும் சம்பந்தமான ஆசிய சமாதான மகாநாடு

ஜப்பானும் சேர்ந்துள்ளது

டோக்கியோ, ஆக. 13

வியட்னும் சம்பந்தமாக ஆசிய சமாதான மாநாடு ஒன்று நடைபெறவேண்டுமென்ற தாய்லந்து, பிலிப்பைன்ஸ், மலேஸியா ஆகிய நாடுகளின் கோரிக்கையுடன் ஜப்பானும் இன்று சேர்ந்துகொண்டது.

இந்த யோசனையில் சேருமாறு சகல நாடுகளையும் அழைத்திருக்கிறது.

ஆனால் இந்த யோசனை அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் ஊக்குவிக்கப்பட்டதெனக் கூறி, கம்போடிய பிரதமர் சிகோனக் அதைக் கண்டித்திருக்கிறார்.

பிரெஞ்சு அதிபர் டிகால் கம்போடியா வரும்போது வியட்னும் சம்பந்தமாக அவரும் சிகோனக்கும் புதிய சமாதான யோசனையை வெளியிடுவார்களென தெரிகிறது.

இதற்கிடையில் வடவியட்னுமில் மொத்தம் 15 சதவிகித மின்சார சப்ளை நிலையத்தை அமெரிக்க விமானங்கள் தாக்கியழித்ததாக அறிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற இத்தாக்குதலில் ஒரு விமானம் காணவில்லை மற்றோர் விமானத்துக்கு நஷ்டமாம்.

சிங்கை துறைமுகத்துக்கு 150 லட்சம் டாலர்

வாஷிங்டன், ஆக. 13

சிங்கப்பூர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுமுகமாக உலக வங்கி 150 ல. சம் டாலர் வழங்கவிருக்கிறது.

தெருவில சிதறிய பணம்!

லீட்ஸ், (இங்கிலாந்து) ஆக 13

புதிய பவுண் நோட்டுக்களைக்கொண்டுசென்ற வங்கி வானொன்று குடைசாய்ந்தபோது, அவ்வானிலிருந்த 40 லட்சம் பவுண் நோட்டுக்களைக் கொண்ட பெட்டிகள் விழுந்து தெருவில் சிதறின.

ஆகஸ்ட் 1963-ல் நடைபெற்ற மிகப்பெரிய 2,600,000 பவுண் ரயில் களவிலும் பார்க்க மோசமானவொரு களவு நடைபெறப்போகிறதோவென அச்சமுற்ற பொலிசார் ஆயுதங்களுடன் விரைந்து அத்தெருவையே போக்குவரத்துக்கு மூடிவிட்டனர்.

ஆனால் அப்படி அசம்பாவிதம் ஒன்றும் நடைபெறவில்லை. அது வெறும் விபத்துத்தான்.

பிறகு பொலிஸ் மேற்பார்வையில் வங்கி உத்தியோகத்தர்கள் 53 பெட்டிகளையும் வங்கியில் சேர்த்தனர்.

(பி. டி. ஸி.)

புதிய கிராம அபிவிருத்தி அதிகாரி

நெடுந்தீவு, சனி

பல வருடங்களாக நிரப்பப்படாது இருந்த நெடுந்தீவு கிராம அபிவிருத்தி அதிகாரியின்இடம் சென்ற மாதத்திலிருந்து நிரப்பப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு திரு. கே. சிவரத்னம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அஸ்ஸாம் கலகம் குறித்து ஸ்ரீமதி காந்தி கவலை

புதுடில்லி, ஆக. 13

அஸ்ஸாமில் ஏற்பட்ட கலவரங்கள் குறித்து இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி ஆழ்ந்த கவலைதெரிவித்திருக்கிறார்.

அஸ்ஸாம் ராஜ்யத்தைச் சேர்ந்த பார்லிமெண்ட அங்கத்தினர்களின் கூட்டத்தில் அவர் பேசினார்.

இதற்கிடையில் அந்த ராஜ்யத்தின் அவசர உணவுத்தேவைகளைச் சமாளிக்க அரிசியும், கோதுமையும் அனுப்புமாறு ஸ்ரீமதி காந்தி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அஸ்ஸாமில் ஏற்பட்டுள்ள நிலைமை அரசியல்வாதிகளுக்கு மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் கவலையை அளித்திருக்கிறதென பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசிய மத்திய மந்திரி திரு சஞ்சீவி ரெட்டி கூறினார். நிற்க

நேற்று மாலைவரை ராஜ்யத்தில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இல்லையெனக் கூறப்படுகிறது. பல நகரங்களில் பகல்நேர ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தப்பட்டும், நீக்கப்பட்டும் இருக்கின்றன.

கௌஹாட்டியில் நேற்று அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. புதிதாக 11 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த 800 பேர் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவுக்கு பிரிட்டன் வாக்குறுதி

புதுடில்லி, ஆகஸ்ட் 13

இந்தியாவின் வர்த்தக நலன்கள் உறுதிப்படுத்தப்பட்டாலொழிய, தான் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேரப்போவதில்லை என பிரிட்டன் புதுடில்லிக்கு உறுதியளித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

அகமரிக்காவில் பீடில்ஸ்

சிக்காகோ, ஆகஸ்ட் 13

பிரபல 'பீடில்ஸ்' நால்வர் தங்கள் அமெரிக்க விஜயத்தின் முதல்கட்டமாக சிக்காகோவில் பெரும் வரவேற்புப் பெற்றார்கள்.

அலாமாவில் பீடில்ஸ் எதிர்ப்பு இயக்கம் ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

மெர்டெகா கால்பந்தாட்டம்

கோலாலம்பூர், ஆகஸ்ட் 13

மெர்டெகா கால்பந்து போட்டி இன்று கோலாலம்பூரில் ஆரம்பமாகியது. இறுதிப் போட்டி வருகிற 28-ம் திகதி நடைபெறும்.

கமலாதேவிக்கு மக்ஸேஸே பரிசு

மணிலா, ஆகஸ்ட் 13

இந்தியக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகர்த்தாவும் தலைவருமான திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாயாவுக்கு இவ்வருட ரமோன் மக்ஸேஸே பரிசு வழங்கப்படுமென்று இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூகத் தலைமைக்காக இப்பரிசு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

பத்தாயிரம் அமெரிக்க டாலர்களைக்கொண்ட இப்பரிசு கைத்தொழில், கூட்டுறவுத் துறைகளிலும், அரசியல் கலைத்துறைகளிலும் திருமதி சட்டோபாத்தியாய ஆற்றிய இடைவிடாத சேவைகளுக்காக அவருக்கு வழங்கப்படவிருக்கிறது.

(பி டி ஸி)

5-வது டெஸ்ட் தலைமை மாற்றம்

லண்டன், ஆகஸ்ட் 13

அடுத்த வியாழக்கிழமை இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியத் தூதுகோஷ்டிக்குமிடையே 5-வது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டி ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகும்.

இங்கிலாந்து கோஷ்டியின் புதிய காப்டனாக பிரபாஸ் குளோஸ் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து கோஷ்டிக்கு 3 காப்டன்கள் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது

எமக் ஸ்மித், கவுட்ரி, குரோஸ் ஆகியோரே அவர்கள்.

இலங்கை ஹாக்கி

புதுடில்லி, ஆகஸ்ட் 13

அடுத்தமாதம் இலங்கை பள்ளிக்கூட கோஷ்டி இந்தியாவில் 3 டெஸ்ட் ஹாக்கி ஆட்டங்களில் கலந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டது.

பிரான்சுக்கு பாக். பிரதமர்

கராச்சி, ஆகஸ்ட் 13

இவ்வருட இறுதிக்குள் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் ஆசிய சமாதானம் பற்றி பிரெஞ்சு ஜனாதிபதி டிகாலுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப் பிரான்ஸ் செல்வரென அறிவிக்கப்பட்டுள்ளது.

(பி டி ஸி)

லண்டனைக் கலக்கிய முக்கொலை!

லண்டன், ஆக. 14

மேற்கு லண்டனில் ஆயுதமற்ற 3 பொலிஸ்காரர்கள் நேற்று துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது. பிரிட்டனில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து, கொலையாளிகளைத் தேடும் பிரமாண்ட அளவிலான முயற்சிகள் ஆரம்பமாகியிருக்கின்றன

சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் சென்ற கார்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு, அதிலிருந்தவர்கள் விசாரிக்கப்பட்டார்கள்.

கடந்த 50 ஆண்டுகளில் இத்தகைய படுகொலைகள் பிரிட்டனில்நடைபெற்றதில்லை எனக் கூறப்பட்டது.

நாட்டுப்புற வாசஸ்தலத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், இக்கொலையைத் தொடர்ந்து அவசரமாக லண்டன் திரும்பியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமொழி

பிறருக்கு உண்மையில் உதவியாக இருக்க விரும்புபவர்கள், மனம், வாக்கு, காயங்களால் சுத்தமாக இருக்கவேண்டும். இந்த சுத்தம் எப்படி ஏற்படும்? சாந்தி, அன்பு, இன்பமயமாகவுள்ள தெய்வத்துடன் மனோலயப்படுவதன்மூலமே இது ஏற்பட முடியும். தினசரி தியானம் செய்வதே இதற்கு வழியாகும்.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 40 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

திங்கள் — பராபவ ஆண்டு ஆடி மீ 29 உ (14-8-66)

துவேஷப் பிரசாரம்

துரியோதனன் கண்களுக்கு யாரைப் பார்த்தாலும் அயோக்கியனாகத்தான் தெரியுமாம். அதைப்போல்தான் எந்த நல்ல காரியத்தையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அரசியல்வாதிகள் நம் நாட்டிலுள்ளனர். சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியம் மீண்டும் உருவாகி வருவதைக்கண்டு மகிழ்ச்சியடையும் மக்களை மத்தியில் இந்தக் 'காமாலைக்கண்ணர்கள்' துவேஷத்தைப் பரப்புவதில் மீண்டும் முனைந்திருக்கின்றனர். இவர்கள் விஷயத்தில் நாட்டு மக்கள் அனைவரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

வகுப்புவாத நடவடிக்கைகள் காரணமாக சென்ற ஒன்பது வருடகாலத்தில் ஆட்சிபீடத்திலிருந்த பிரதமர்கள் நாட்டின் சகலபகுதிகளுக்கும் சென்று திரும்ப முடியாதிருந்தது. அந்த அரசாங்க அமைச்சர்கள் கூட நிம்மதியாக நாட்டின் சகலபகுதிகளுக்கும் செல்ல முடியாதிருந்தது. ஒரே மொழி, ஒரே நாடு என்ற கொள்கையின் மூலம், பல்வேறு மொழி, மத, கலாசாரத்தையுடைய மக்களின்மீது தமது மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை திணித்து அவர்கள் விரும்பிய தேசிய ஐக்கியத்தை உருவாக்கமுனைந்தனர். இந்த முயற்சி தோல்வியடைந்ததுமட்டுமல்ல, பல்லாண்டுகளாக ஒற்றுமையாக வாழ்ந்த சமூகங்களுக்கிடையில் வேற்றுமையையும் பிரிவினையையும் ஏற்படுத்தி தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைத்தது. நாட்டின் முன்னேற்றம் ஸ்தம்பித்தது. தேசிய அரசாங்கம்சென்ற வருடம் பதவிக்கு வந்ததிலிருந்து நிலைமை மாறியது. வேறுபட்டமொழி மேலோரும், வேறுபட்ட கலாச்சாரத்தைக் கொண்டோரும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, நாட்டின் நலனைக் கருதி வாழமுடியுமென்பதை தேசிய அரசாங்கம் செயலில் காட்டிவருகிறது. இதன் பயனாக சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியம் மீண்டும் உருப்பெற்று வருகிறது.

இந்த நாட்டின் அரசாங்கத்தில் இந்நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் உரிமையும் பங்கும் இருக்கிறதென்ற மனப்பான்மை அனைவரிடத்திலும் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பிரதமர் தான் மட்டக்களப்பிலுள்ளவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ளவர்களுக்கும் பிரதமர் என்பதை உணர்ந்துள்ளனர். இதனால்தான் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கிழக்கு மாகாணத்துக்கும் வடக்குமாகாணத்துக்கும் விஜயம்செய்ய முடிந்தது. வடக்கு கிழக்கு மாகாண மக்கள் அவரைத் தங்கள் பிரதமராக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வகுப்புவாதம் சிறிது காலத்துக்குத்தான் வெற்றியளிக்கு மென்பதையும் பொதுமக்களை நீண்டகாலத்துக்கு ஏமாற்றமுடியாதென்பதையும் சென்ற தேர்தலில் நன்றாக உணர்ந்துகொண்ட திரு. டி.பி. இலங்கரத்தினா போன்றவர்கள், இன்னமும் அனுபவத்திலிருந்து படிப்பினை கற்றுக்கொள்ளவில்லையே என்பதுதான் கவலையளிப்பதாக உள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த ஹர்த்தால் நினைவு தினக் கூட்டத்தில் திரு. இலங்கரத்தினாவும் மற்றும் சிலரும், பிரதமரின் யாழ்ப்பாணவிஜயத்தைப் பற்றிப் பேசியதுடன் சிங்கள மக்களைத் தமிழ்மக்களுக்கு பிரதமர் காட்டிக்கொடுத்து விட்டதாகவும் துரோகம் செய்துவிட்டதாகவும் துவேஷ விதை விதைத்திருக்கின்றனர்.

வகுப்புத்துவேஷப்பேச்சுக்களின் விளைவுகளை 1958-ம் ஆண்டில் கண்டறிந்தவர்களும், வகுப்புவாதத்துக்கு எதிராக அன்று போர்க்கொடி ஏந்தியவர்களுமான இடதுசாரித் தலைவர்கள் சிலரும் இதே கூட்டத்தில் வகுப்புவாதத் துவேஷப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கின்றனர்.

அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள்; அரசியல்வாதிகள் இன்றிருப்பார்கள்; நாளை இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுவார்கள். நாடும், நாட்டு மக்களும் இருப்பார்கள். நாட்டின் நலன் தான் முக்கியம். தேர்தலும் பதவியும் அதற்குப் பின்னர் தானென்பதை அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

—

உதவி அமைச்சரின் நல்ல செய்தி

இன்னும் இரண்டு மாதங்களுக்குள் பங்கீட்டு முறையில் ஜவுளி விற்பனை செய்யும் கட்டுப்பாட்டு முறையை நீக்கும் நோக்கத்துடன் ஜவுளிப்பங்கீட்டுமுறை முழுவதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவிருப்பதாக உள்நாட்டு அமைச்சு உதவி மந்திரி ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்திருக்கிறார். இது பலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் நல்ல செய்தியாகும்.

ஜவுளிக்கு விலைக்கட்டுப்பாடுவிதிப்பது, பங்கீட்டு முறையில் விநியோகம் செய்வது சுலபமல்ல. மிகச் சிரமமான இக்காரியத்தை ஆற அமரச் சிந்தித்து, தகுந்த ஆலோசனையின்மீது செய்திருந்தால்இன்று ஏற்பட்டுள்ள சிக்கலும் குழப்பமும் ஏற்பட்டிருக்காது. அரசாங்கத்துக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய ஜவுளிக்கட்டுப்பாட்டுத் திட்டம் விரைவில்நீக்கி எல்லாவிதமான துணிமணிகளும் எல்லோரும் வாங்கக்கூடிய நல்ல நிலைஏற்படவேண்டும்இதற்கு அரசாங்கம் மட்டுமல்ல வர்த்தகர்களும் மக்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம்.

நாளை இந்திய சுதந்திரதினம்

தொழில் மயமாகும் இந்திய கிராமங்கள்

கிராமங்களைத்தொழில்மயமாக்குவதன் மூலம் கிராமப்புறங்களின் வேலைவாய்ப்பையும் உற்பத்தியையும் பெருக்கலாமென்று கருதப்படுகிறது. உத்தியோகம், உற்பத்தி இவ்விரண்டு துறைகளிலும் பெருக்கம் என்ற இலட்சியம் நல்லதுதான். ஆனால், தொழில் மயமாக்குதல் என்றால் என்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கிராமங்களைத் தொழில் மயமாக்குதலானது, கிராமியக் கைத்தொழில், தொழில் மயமாக்குதல் இவை இரண்டிலிருந்தும் வேறுபட்டதாகும்.

தொழில் மயமாக்குதல் என்றால் ஒரு குறிப்பிட்ட கிராமத்திலோ மாவட்டத்திலோ தான் பெரிய எஃகு தொழிற்சாலைகளோ வேறு தொழிற்சாலைகளோ நிறுவப்பட்டு, நவீன இயந்திரங்களுடனும், உள்ளூர்த் திறமையைப்பயன்படுத்தியும் தொழில் மயமாக்கப்படும் என்ற அர்த்தமில்லை.

நாட்டின் மக்கள் அனைவருக்கும் நன்மையைக்கொண்டதே கிராமியத் தொழில் மயமாகும். ஆகவேதான், உள்ளூர் வசதிகளையும் தேவைகளையும் நன்றாக ஆராய்ந்தபின்னரே தொழில் மயத்திட்டம் உருவாகிச் செயற்படவேண்டி இருக்கிறது. ஆகவேதான் ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களின் தொகுதி என்ற அடிப்படையில் தொழில் மயத்திட்டம் செயற்பட முடியாது என்று அனுபவரீதியாக அறியப்பட்டுள்ளது. ஒரளவாவது திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட வேண்டுமாயின், குறைந்தது மாவட்ட அடிப்படையிலாவது தொழில் மயத்திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும். இத்தகைய மாவட்டத்திலுள்ள வசதிகளை முழுக்க ஆராய்ந்த பின்னரே திட்டத்தை அமுலாக்க முயற்சியில் இறங்க வேண்டும்.

சில மாவட்டங்களில்திட்டம் செயற்படப் போதனை மின்சாரம் இருக்காதிருக்கலாம். ஏற்கனவே இதை ஆராயாமல் திட்டத்தை அங்கு செயற்படுத்தத் தொடங்கியிருந்தால், மின்சாரம் தருவிப்பதற்கான செலவும் வீணாகச் சேர்ந்து விடுகிறது. ஆகவேதான் கவனமாகத் திட்டமிடப்பட்டபின்னரே தொழில் மயத் திட்டங்களை குறிப்பிட்டஇடங்களில்தொடங்க வேண்டி இருக்கிறது.

உதவியும் தேவை

தொழில்மயத் திட்டங்களுக்கு வெளியிலிருந்தும் உதவிபெறவேண்டும். குறிப்பிட்ட இடத்திலுள்ள திறமை, சக்தி, வசதிகள் உற்சாகம் இவற்றைப் பயன்படுத்தும் அதே நேரத்தில் பிற இடங்களிலிருந்தும் உதவிபெறவும் அவசியம் ஏற்படலாம். ஓர் குறிப்பிட்ட மாவட்டத்தில் திட்டத்துக்குத் தேவையான திறமையும், மனித சக்தியும் கிடைக்குமென இந்தியக் கிராமப்புற நிலைமையை உணர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இடத்துக்கு இடம் திறமையும், வாய்ப்புக்களும் மாற்றமடையலாம். அத்துடன்

(5-ம் பக்கம்பார்க்க)

தான் சுயாதீனம் பாதிக்கப்படாதவகையிலேயே முன்னேற்ற இவர்கள் விரும்புகிறார்கள். அத்துடன்கைத் தொழில்களை விருத்தி செய்யும் போது, ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளர்ச்சியை மனதிற்கொண்டு அது செய்யப்படுவதில்லை. நாடு முழுவதுமுள்ள கைத்தொழில்கள் பொதுவாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் பாரம்பரிய கைத்தொழில்ஒன்று, குறிப்பிட்ட ஒரு கிராமத்துடன் அல்லது சில கிராமங்களின் தொகுதியுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். குறிப்பிட்ட எல்லைக்கப்பால் இத்தகைய கைத்தொழில் இயங்க முடியாது.

ஆனால் கிராமியத்தொழில் மயமோ பெரிய நிலப்பரப்பில் குறிப்பிட்ட எல்லைகளுக்கும் அப்பால் இயங்கி, கிராமங்களின் சுயநிறைவை முறியடிப்பதாக அமையும். அத்துடன் தனிமையில் சில கைத்தொழில்களை மாத்திரம் விருத்திசெய்யும் திட்டமல்ல கிராமியத் தொழில் மயமென்பதுபொருளாதார சமூக மாற்றத்தை நோக்காகக்கொண்டதே கிராமியத் தொழில் மயமாகும். ஆகவேதான், உள்ளூர் வசதிகளையும் தேவைகளையும் நன்றாக ஆராய்ந்தபின்னரே தொழில் மயத்திட்டம் உருவாகிச் செயற்படவேண்டி இருக்கிறது. ஆகவேதான் ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களின் தொகுதி என்ற அடிப்படையில் தொழில் மயத்திட்டம் செயற்பட முடியாது என்று அனுபவரீதியாக அறியப்பட்டுள்ளது. ஒரளவாவது திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட வேண்டுமாயின், குறைந்தது மாவட்ட அடிப்படையிலாவது தொழில் மயத்திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும். இத்தகைய மாவட்டத்திலுள்ள வசதிகளை முழுக்க ஆராய்ந்த பின்னரே திட்டத்தை அமுலாக்க முயற்சியில் இறங்க வேண்டும்.

கைத்தொழிலிலிருந்து வேறுபாடு

இதே மாதிரித்தான் கிராமியத் தொழில் மயத்தை நாம் கிராமியக் கைத்தொழிலிலிருந்தும் வேறுபடுத்த வேண்டும்

ஏனெனில் கிராமியக்கைத் தொழில் விருத்தியின் நோக்கம் பாரம்பரியமாக இருந்து வரும் கைத்தொழில்களை நவீன முறையில் முன்னேற்றுவதேயாகும். பழைய கைத்தொழில்களுக்குப் புதுமெருகு ஊட்டுவதுதான் இன்றைய கைத்தொழில் வளர்ச்சியாகும், நவீன முறைகளைக் கையாண்டு, நவீன இயந்திரங்களை உபயோகித்து ஏற்கனவே இருக்கும் கைத்தொழில்களை விருத்திசெய்வதும், புதிய கைத்தொழில்களை உருவாக்குவதும் கைத்தொழில் வளர்ச்சியின் அம்சங்களாகும்.

ஆனால் கைத்தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டிருப்போர் கைத்தொழில்களின் பாரம்பரியத்தைக் கைவிட விரும்புவதில்லை. முன்னேற்ற விரும்பினாலும், பழைய கைத்தொழில்களை அவற்

(5-ம் கலத் தொடர்ச்சி)

அலை வினைதீர்க்கும் ஐயாறன்னே யென்றென்றே
நாவாரற்றி நைகின்றேனே.

—அப்பர் சுவாமிகள்

ஐயாறன் எழுதியது

முந்தாநாள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடந்த ஓர் ஆங்கிலநாடகத்தைப்பார்த்தேன். அறிஞர் பெர்னாட்ஷா அவர்கள் எழுதிய "ஆயுத முனா மனிதனும்" என்ற ஹாஸ்ய நாடகம் அது. அவரது 110வது ஆண்டு விழாவைமுன்னிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே இந்த நாடகத்தை யாழ்ப்பாண பிரதேச கலா மன்றத்தினர் இதற்கு ஒழுங்கு செய்தனர். அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா இதைத் தயாரித்துள்ளதாயும், தமது உறவினர் ஒருவர் இதில் நடிப்பதாயும் அவசியம் சென்று பார்க்குமாறும் ஓர் அன்பர் கூறவே இந்நாடகத்தைப் பார்க்கச்சென்றேன்.

நாடகம் குறிப்பிட்டபடி 7மணிக்கு 'டக்' என்று ஆரம்பமாயிற்று. மூன்றே காட்சிகள். எட்டு நடிகர்கள். அதில் மூவர் பெண்கள். ஒவ்வொரு காட்சிகளுக்குமிடையே பத்து நிமிட ஓய்வு. இரண்டு மணிநேரத்தில் நாடகம் முடிந்தது.

ஒருபெண்மணியின்படுக்கை அறை, இராணுவ அதிகாரியின்வீட்டுத்தோட்டம், அவரது புத்தகசாலை இம்மூன்று காட்சிகள்தான். இதை நத்ருபமாகவும்கச்சித மாகவும் அமைத்திருந்தனர்.

மண்டபம் நிறைய ஆண், பெண் ரஸிகர்கள்கூடி இந்நாடகத்தை ரஸித்தார்கள். இதில் எல்லா நடிகர்களும் திறமையாக நடித்தனரென்றாலும் மேஜராக நடித்த டாக்டர்கேப்ரியலும், பணிப்பெண்ணாக நடித்த லலிதா ஆர்னல்டும் பலத்த கரகோஷங்களைப் பெற்றனர். ஆங்கிலநாடகத்தை இவ்வளவு திறமையாகநடத்தியயாழ்ப்பாண கலைஞர்களையும், இதற்கு ஒழுங்கு செய்தவர்களையும் பாராட்டவேண்டும். போதிய உற்சாகமும் சந்தர்ப்பமுமளிப்பதாயின், நமதுகலைஞர்கள், ஆங்கிலேயரும் மெச்சும்படி, ஆங்கில நாடகங்களை நடிக்க முடியுமென்பது அன்று தெரிந்தது.

ஒரே ஒரு பெரியகுறை; இவ்வித நாடகங்கள்நடத்த நல்ல மண்டபம் யாழ்ப்பாணத்தில் இல்லாததுதான். நகரமண்டபத்திலே பல குறைகளுண்டு. அரசாங்க அதிபர் இதை உணர்ந்திருப்பதால், இக்குறைகளைத் தீர்த்து நவீன முறையில் முதல்தரமான நாடக மன்றத்தைக்கட்ட அவர் முயற்சி எடுப்பின், அது பலவிதங்களிலும் நன்மையாகவும், இங்கு பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமாகி வரும் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணத்தில் ஓர் அழியாச் சின்னத்தையும் ஏற்படுத்தலாம். உதவிநாடகங்கள் மூலமும், இந்தியாவிலிருந்து நல்ல கலைஞர்களை வரவழைத்தும் உதவி நிதி திரட்டி இக்காரியத்தை பிரதேசகலா மன்றத்தின்மூலம் நிறைவேற்றலாம்.

இங்கு அரசாங்கத்தின் உதவியை நம்பி இருப்பதில் பயனில்லை. நாமே நமக்கான உதவியைச் செய்து கொள்ளவேண்டும்.

⁂ ⁂ ⁂

வில்லாடி வேடனே யென்றேன் நானே வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றேன் நானே, சொல்லாயசூழலா, யென்றேன்நானே சுனாவரைய தொல் நெறியே யென்றேன் நானே, எல்லாமா யென்னுயிரே யென்றேன் நானே இலங்கையர்கோன் தோளிறுத்தா யென்றேன் நானே

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் வழக்காளியிடம் 50 ரூபாய் வாங்கினாரா?

பொலிஸ் அதிகாரிக்கு விசாரணைப் பிரதி அனுப்ப உத்தரவு

மாவிட்டபுரம், சனி

"வழக்கின் முறைப்பாட்டுக்காரர், சப்இன்ஸ்பெக்டருக்கு பொலிஸ் நிலையத்தில் வைத்து ஐம்பது ரூபாய் லஞ்சமாகக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சாட்சியத்தை என்னால் நம்பாமல்விட முடியாது. ஆனால் இவ்விஷயமாக இக் கோர்ட்டில் விசாரிக்க எனக்கு அதிகாரமில்லை. இருந்தாலும் இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்காதுவிடின் எனது கடமையிலிருந்து தவறியவனாகி விடுவேன். இதனால் இவ்வழக்குச் சம்பந்தமான விசாரணை அறிக்கையை யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன்டுக்கு அனுப்பும்படி உத்தரவிடுகிறேன். அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கட்டும்" என்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா தமது முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட திருட்டு வழக்கொன்றில் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலையடியைச் சேர்ந்த சகோதரர்களான சுப்பிரமணியம் இராஜேந்திரம், குணரத்தினம் ஆகிய இருவரும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் திருச்செல்வம் என்பவருக்குச் சொந்தமானதும் 275 ரூபாய் பெறுமதியானதுமான 32 இரும்புக்கம்பிகளைக் கடந்த டிசம்பர் மாதம் 8-ம் திகதி திருடியதாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். வழக்காளி தரப்பில் காங்கேசன்துறை குற்றப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆ. குமரகுரு வழக்கை நடத்தினார்.

மயில்வாகனம் திருச்செல்வம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சென்ற டிசம்பர் மாதம் 8-ம் திகதி இரவு நான்கு மணியளவில் நான் எழுந்து பார்த்தபோது வீட்டுவளவில் இருந்த 32 இரும்புக்கம்பிகளையும் காணவில்லை. நான் இதுபற்றி அடுத்த நாட்காலை காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்தேன். 11-ம் திகதி இரவு அவற்றை எதிரிகளின் வீட்டில் வைத்து சப்இன்ஸ்பெக்டர் ஜோகரன் எனக்கு காண்பித்தார். நான் அவற்றை அடையாளம் காட்டினேன். அவற்றின் பெறுமதி 275 ரூபாய். இக்கம்பிகளை கொழும்பில் வைத்திலிங்கம் கம்பெனியில் வாங்கினேன். இக்கம்பிகளில் சிவப்பு, பச்சை அடையாளங்கள் உண்டு ஒவ்வொரு கம்பியும் 20 அடி நீளமும் 1/2 அங்குல விட்டமும் உடையன இவை பதினாறு கம்பிகள் கொண்ட கட்டுக்களாகக் கட்டப்பட்டிருந்தன.

இரும்புக் கம்பிகள் மாட்டு வண்டியில் பொலிஸ்நிலையம் கொண்டு வரப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் சப்இன்ஸ்பெக்டர், இரும்புக் கம்பிகளைக் கண்டுபிடிக்க இராசரத்தினம் உதவிபுரிந்ததாகவும் அவருக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கும்படியும் என்னிடம் கூறியதனால் நான் அவ்வாறே ஐம்பது ரூபாய் கொடுத்தேன். நான் இராசரத்தினத்திடம் ஐம்பது ரூபாய் கொடுத்ததென்பது சரியல்ல. நான் ஐம்பது ரூபாயை சப்இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தேன். அவர் அதனை இராசரத்தினத்துக்குக் கொடுத்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

சம்பவசமயம் காங்கேசன்துறை குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியாகவும் தற்சமயம் வவனியா சட்டவிரோதக் குடியேற்றதடுப்பு பொலிஸ்நிலைய அதிகாரியாகவும் கடமையாற்றும் சப்இன்ஸ்பெக்டர் டி. எச். பி. ஜோகரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

திருச்செல்வத்தின்முறைப்பாட்டினை நான் விசாரித்தேன். எனக்குக் கிடைத்த தகவல் ஒன்றினைத் தொடர்ந்து பதினொராம் திகதி இரவு எதிரிகளின் வீட்டுக்குச் சென்று அவர்களிருவரையும் கைது செய்தேன். அவர்கள் தங்களின் வீட்டுக்குப் பின்னால் கம்பி மறைக்கப்பட்டிருந்த இடத்தைக் காட்டினார்கள். நான் அதனைப் பொறுப்பேற்றேன். திருச்செல்வம் அவற்றைத் தம்முடையது என அடையாளம் காட்டினார். எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

நான் அன்றிரவு இராசரத்தினம் என்பவருடன் எதிரிகள் வீட்டுக்குச் செல்லவில்லை. திருச்செல்வத்தின் வீட்டுக்கும் இராசரத்தினத்துடன் செல்லவில்லை. எதிரிகள் வீட்டிலிருந்து நானும் திருச்செல்வமும் இராசரத்தினமும் ஒன்றாக ஜீப்பில் பொலிஸ் நிலையம் சென்றோம் என்பதனையும் மறுக்கிறேன். இராசரத்தினத்தை எதிரிகள் வீட்டில் கண்டேன். ஆனால் ஏன் அவர் அங்கு வந்தார் என்பதனைக் கேட்கவில்லை. அதற்குப்பின் இராசரத்தினத்தைப் பொலிஸ் நிலையத்திலும் கண்டேன். அங்கும் ஏன் வந்தார் என்பதனைக் கேட்கவில்லை. நான் பொலிஸ் நிலையத்தில் இராசரத்தினம் தகவல் தந்தபடியாக அவருக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கும்படி திருச்செல்வத்திடம் கூறவில்லை. அவரிடம் ஐம்பது ரூபாய் வாங்கவில்லை. எனக்கும் திருச்செல்வத்துக்குமிடையே எவ்வித கோபமுமில்லை. திருச்செல்வம் ஏன் கோர்ட்டில் எனக்கு ஐம்பது ரூபாய் லஞ்சம் தந்ததாகக் கூறினார் என்பதற்கு என்னால் காரணம் காட்ட முடியாது. திருச்செல்வம் 11-ம் திகதி இரவு நானும் இராசரத்தினமும் தமது வீட்டுக்கு வந்ததாகவும் அங்கு இருந்து மூவரும் ஒருமித்து எதிரிகளின் வீட்டுக்கும் அங்கிருந்து ஒருமித்து பொலிஸ் நிலையத்துக்கும் சென்றோம் என்று ஏன் கூறினார் என்பதும் எனக்குத் தெரியாது.

நீதிபதி சாட்சியக் குறுக்கு விசாரணை செய்தபோது கூறியதாவது:

இவ்வழக்கில் குற்றப்பத்திரிகையை நான்தான் தாக்கல் செய்தேன். உந்த வழக்குத் தாக்கல் செய்வதற்கும் எதிரிகள்தான் இக்கம்பிகளைத் திருடினார்கள் என்பதற்கும் சாட்சியங்கள் இருந்தன. எதிரிகள்தான் இக்கம்பிகளை வைத்திருந்தார்கள் என்பதற்குச் சாட்சியமில்லை.

நீதிபதி விசாரணை முடிவில் எதிரிகள்தான் கம்பிகளைத் திருடினார்கள் என்பதை நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லை எனக் கூறி எதிரிகளை விடுதலை செய்து வழக்கு விசாரணைப் பிரதியை யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன்டுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

யார் யார் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்களுக்கும் கூட இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும் இதுவரை பார்லிமெண்ட் பிரதிநிதிகள், செனட்டர்களுக்கு மோட்டார் தேவையென இருநூற்றுக்கு மதிக்கான விண்ணப்பங்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு கிடைத்துள்ளது.

மகாவித்தியாலய மாகதரம்உயரும்

தெமட்டகொடை, சனி

"எனது தொகுதியில் பெரிய தமிழ் வித்தியாலயமாகிய இப்பாடசாலை இதுவரை மகாவித்தியாலயமாக்கப்படாதது வருத்தத்துக்குரியது. மிக விரைவில் இதனை மகாவித்தியாலயமாக்கி தனிக்கட்டிட வசதி பெற்றுத் தருவேன்" என அண்மையில் பொரளை புத்த இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற தெமட்டக்கொட தமிழ் வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய தொழில்வீடமைப்பு அமைச்சர் திரு. முகம்மது குறிப்பிட்டார்.

விழாவிக்குத் தலைமைதாங்கிய கல்விகலாச்சார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கலாநிதி ஆனந்தகுருகே வித்தியாலய முன்னேற்றக் கழகத்திற்கு பெற்றோர் தொடர்ந்து ஆர்வம்காட்டின் நல்ல எதிர்காலமுண்டென்றும், 1963-ம் ஆண்டில் சிங்கள வித்தியாலயம் தரமுயர்த்தப்பட்டபோதே தமிழ் வித்தியாலயமும் தரமுயர்த்தப்படாதது ஆச்சரியத்துக்குரியதென்றும் கூறினார். தொழிலமைச்சரின் உதவியுடன் வித்யாலய வளர்ச்சிக்கு உதவுவதாக உறுதியளித்தார்.

தலைமையாசிரியர் பண்டிதர் செ. சிவலிங்கம் தமது அறிக்கையில் வித்தியாலயத் தரமுயர்த்தல், தொழில் விஞ்ஞானக்கல்வி வசதிகள், தனிக்கட்டிடம், தளபாடங்களின் தேவைபற்றிக் குறிப்பிட்டார். திருமதி ஆனந்தகுருகே பரிசில் வழங்கினார். விழாவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பரந்தனில் மந்திரி

கிளிநொச்சி, சனி

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவும், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினமும் உப்பு கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு. அமிர்தநாயகமும் ஆனையிறவு உப்பளம், பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றைப்பார்வையிட்டனர் அமைச்சர் இரு இடங்களையும் பார்வையிட்ட பின்னர் இருஸ்தாபனங்களிலும் காணப்படும் குறைகளைக் கவனிப்பதாகக் கூறினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மலைநாட்டுக்கு தமிழாசிரியர்கள்

மத்தியமாகாண கல்வி அபிவிருத்தி சங்கம் மகஜர்

கண்டி, சனி

கண்டி மத்திய மாகாண இந்துக்கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் தமிழ் பேசும் மாணவர்களின் பெற்றோர்களும் ஆதரவாளர்களும் 8ந் திகதி சபைத் தலைவர் திரு. எஸ். பி. வைத்திலிங்கம் தலைமையில் கண்டி சைவமகாசபைக் கட்டிடத்தில்கூடி தமிழ் பேசும் மாணவர்களில் கல்விப் பிரச்னை பற்றி ஆராய்ந்தனர்.

இன்றைய தமிழ்மாணவர்கள் மேற்படிப்பு வசதியில்லாமல்கண்டிமாநகரில் படும் இன்னல்களை எடுத்துவிளக்கியதோடு எதிர்காலத்தில்கல்வித்துறையில் ஏற்படக் கூடிய ஓர் இக்கட்டானநிலையைதவிர்க்கவேண்டுமானால் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு பிரத்தியோடு செயற்படவேண்டும் என்பதைத் தலைவர் வற்புறுத்தினார்.

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் கல்விப் பொதுநலச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத்தின் சார்பில் கீழ்க்கண்ட மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

மலைநாட்டுப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக உடனடியாக யாழ்ப்பாணத்திலிருந்து மலைநாட்டுக்கு ஆசிரியர்களை மாற்றுவதற்குக் கல்விப்பகுதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல்லாச் சமூகங்களுக்கும் நன்மைபயக்க எல்லாப் பாடசாலைகளிலும் 3 மொழிகளிலும் கல்வி போதிக்கப்படல்வேண்டும்.

1967ம் ஆண்டிலிருந்து கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிலும், ஆர்ச். ஸ்கொலன்டிக்கா கல்லூரியிலும் மீண்டும் தமிழ்வகுப்புகளை ஆரம்பிக்கவேண்டும். மற்றும் எல்லாப் பாடசாலைகளிலும் 1956ம் ஆண்டுக்குப் பின் மூடப்பட்ட தமிழ் வகுப்புகளை மீண்டும் தொடக்க வேண்டும்.

இவ்விடயங்களைத் திரு. கே. வி. மயில்வாகனம் தெளிவாக விளக்கியதோடு மலைநாட்டின் பல்வேறு பகுதி

(8-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சில கிராமப்புறங்களுக்கான தொழில்மயத் திட்டங்களுக்கு அண்மையிலுள்ள பட்டணத்தில் வசிக்கும் முனைசாலிகளின் திறமையும் உதவியும் தேவைப்படலாம். வெளிஇடங்களிலிருக்கும் படித்த திறமையாளர்களின் உதவியின்றிக் கிராமப்புறங்களில் தொழில்மயத்திட்டங்களைமுற்றிலும் கிராமப்புறத் திறமையைக் கொண்டு செயற்படுத்திவிட முடியாது.

இதேவிதத்தில், உள்ளூரில் கிடைக்கக்கூடிய வசதிகள், மூலப்பொருட்களுக்கு அனுசரணையாக வெளிஇடங்களிலிருந்தும் வசதிகள், மூலப்பொருட்களைப் பெறவேண்டும். நாட்டின் எந்தவொரு பகுதியும் எல்லா வசதிகளும் பொருட்களிலும் சுயநிறைவு பெற்றிருக்கவில்லை. ஒன்றில் சில பொருட்கள் அதிகமாகவும், மற்றதில் குறைவாகவுமே உள்ளன. ஆகவே இடத்துக்கு இடம் இணைப்பு இருந்தால்தான் தொழில்மயத்திட்டம் வெற்றிகரமாகச் செயற்படும்.

நிரந்தரக்குழுவின் தோல்வி

இந்தியாவில் தொழில்மயத்திட்டங்கள் செயற்படுவதற்கு உதவிபுரிய ஓர் நிரந்தரக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் இத் திட்டங்களை அமுலாக்கக்கூடிய பொறுப்பை ஏற்கும் எந்த அமைப்பு நிறுவனமும் இல்லாதது தொழில்மயத் திட்டத்துக்கு இடையூறாகஇருந்தது இச்சந்தர்ப்பத்தில், பிரதேச ராஜாங்கங்களின் உதவியை நாடவேண்டிய நிர்ப்பந்தமேஇந்நிரந்தரக் குழுவுக்கு ஏற்பட்டது. நிதி வசதி, நிர்வாகம் ஆகியவற்றில்கஷ்டங்கள் இருந்ததும் திட்டங்கள் செயற்படுவதைத் தாமதமாக்கிவிட்டது.

தொழில்மயத் திட்டத்தை எதிர்நோக்கும் மற்றுமோர் பிரச்னை, முக்கிய இயந்திரம், கருவிகள் மூலப்பொருட்கள் கிடைக்கக்கூடிய வசதியாகும். பல இடங்களில், அவசியம் தேவையான எஃகு, சிமெந்து ஆகிய பொருட்கள் கிடைப்பதில்லை. தொழில்மயத்திட்டத்திற்கு அவசியம் தேவைப்படும் இத்தகைய மூலப்பொருட்கள் கிடைக்காமை எவ்வளவு தூரம் அத்திட்டத்தின் வெற்றியைப் பாதிக்கும் என்பது சரிவர உணரப்படுவதில்லை. பலம்வாய்ந்த பெரும் தொழிற்திட்டங்களுக்குப் பொருட்கள் விநியோகம்செய்பவர்களுக்கும், அரசாங்கத்துக்கும் கிராமப்புறத் தொழில்மயத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் பலஹீனமான முறையீடுகள் செவிகளுக்கு எட்டுவதில்லை.

கிராமப்புறத் தொழில்மயத்திட்டங்களைப் பாதிக்கும் மற்றப் பிரச்னைகளாவன, மின்சக்தி, தொடர்புச் சாதனங்கள் கிடைப்பதிலுள்ள கஷ்டமாகும். அத்துடன், தொழில்களுக்கான ஆராய்ச்சியும் ஓர் தடைக்கல்லாகும். தொழில்நுட்ப ஆராய்ச்சி இந் நாட்டில் தொடக்க நிலையில்தான் இருக்கின்றது. அப்படி கிடைக்கக்கூடிய ஆராய்ச்சியும் பெரியதொழிற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதேயொழிய, கிராமிய தொழில்மயத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

அரசாங்கத்தின் பொறுப்பு

இப்பிரச்னைகளை தீர்த்து கிராமிய தொழில்மயத்திட்டத்தை இந் நாட்டில் வெற்றிகரமாக இயக்கச் செய்வதானால், நாடு முழுவதற்கும் பொதுவாக ஓர் மத்திய ஏஜென்சி கிராமியத் தொழில்மயத் திட்டங்களை ஏற்று நடாத்த நிறுவப்படவேண்டும். எல்லாக் கட்டங்களிலும் செயற்படக்கூடிய தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்படாமல், கிராமியத் தொழில்மயத்திட்டங்களில் பயனில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கைத்தொழில்

சவர்க்காரம் செய்வதெப்படி?

"நமது கைத்தொழில்" என்ற இப் புதிய தொடரில், இவ் வாரம் சவர்க்காரம் செய் முறை பற்றிய விபரம் வெளியாகிறது. இப்புதிய பகுதியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் ஆதார பூர்வமான விளக்கத்துடன் கட்டுரைகளை அனுப்பி வைக்க வேண்டும்.

செய்முறை

ஒரு பாத்திரத்தில் ஏதேனும் தூய எண்ணெய்வகை யொன்றையிட்டு நன்கு கொதிக்கவைக்கவும். (தேங்காய் எண்ணெய், ஆமணக்கு நெய், ஒலிவ் எண்ணெய் இவைகளில்ஒன்றைத்தெரிந்தெடுப்பது மேலானது) எண்ணெய்கொதித்து வரும் நிலையில் கோஸ்டிக் சோடாவை அளவாக இட்டு நன்கு கலக்கி ஒரு குழம்பாக்குக. இதன் பின் இறுகமுன்னர் கறியுப்பின் கரைசலைச்சேர்த்து ஆறவிடுக. ஆறியபின் பாத்திரத்தை நோக்கின், கோஸ்டிக் சோடா எண்ணெய், கறியுப்பு முதலியவற்றின் சேர்க்கையாலான சவர்க்காரம் உண்டாகியிருப்பதைக் காணலாம்.

இரசாயன விளக்கம்

கொதித்த எண்ணெயிலுள்ள ரைஸ்டரோல் கிளிசறினானது கோஸ்டிக்சோடாவினால் நீர்ப்பகுப்படைகின்றது. ரைஸ்டரோல் கிளிசறினுக்கு நீரை ஊற்றியவுடன் சோடியம் ஸ்ரறேற்றுத் தோன்றுகிறது. இந்நிலையில் கிளிசறின் சுயாதீனமடைகின்றது. சோடியம்ஸ்ரறேற்றையும் கிளிசறினையும்பாகுபடுத்துமுகமாக கறியுப்பின் கரைசல் விடப்படுகின்றது. தற்பொழுது கலவையில் இரு படைகள் தோன்றும். மேற்படையில் சோடியம் ஸ்ரறேற்றும் சிறிதளவு கறியுப்பும் காணப்படும். கீழ்ப்படையில் கிளிசறினும்அதிகளவு கறியுப்பும் காணப்படும். இதன்பின் குளிரவிடப்படுகின்றது. பாரங்கூடிய கிளிசறின் உப்புக்களின் அடியில் உறைய தூயசவர்க்காரக் கரைசல் மிதந்து இருக்கின்றது. இதுவே சவர்க்காரம் ஆக்கலின் அடிப்படைத் தத்துவமாகும்.

உதவியுவர்: எல். வி ஆர். மாதவன்

நாடும் நாமும்

அமெரிக்கா

1766-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் திகதி சுதந்திர மடைந்த அமெரிக்கா, இன்று விஞ்ஞானம், கலை, பொருளாதாரம் அரசியல் போன்ற துறைகளில் நன்கு முன்னேறிவருவதை அவதானிக்கமுடிகிறது.

36, 15, 211 சதுரமைல்களைக் கொண்ட அமெரிக்காவில், 18, 70, 00, 000 மக்கள் வசிப்பதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. உலகின் ஜனத்தொகைப்படி 4-வது நாடு அமெரிக்கா.

இதன் முதலாவது ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் வாஷிங்டன் என்பவராவார் இவரின் ஞாபகத்தின் சின்னமாக அந்நாட்டின் தலைநகரம் விளங்குகிறது. 'வாஷிங்டன்' என்பதுதான் அமெரிக்காவின் தலைநகரமாகும். இந்நாட்டில் இதுவரை 36 ஜனாதிபதிகள் பதவிவகித்துள்ளனர். தற்போதைய ஜனாதிபதியின் பெயர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன்.

— அ. கனகசூரியர்.

யுகோஸ்லேவியா

யுகோஸ்லேவியாவில் பாக்கார் துறைமுகத்திலிருந்து செகரப்பிக் உள்ள கத்திகளிப்பு நிலையத்தினைத் தொடுக்கும் முதலாவது குழாய்த் தொடர் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது இது மிகவும் சரித்திரப்பிரசித்தி பெற்றது. 176.5 கிலோ மீட்டர் நீளமான குழாய்த்தொடர் வேலைகள் 1968-ல் முடிவடையும். இக் குழாய்த் தொடர் பொருளாதார ரீதியில் இலாபகரமாக அமைந்தால் பெல்கிரேட் டிலுள்ள பஞ்சிவோவுக்கும் இணைக்கப்படும். குழாய்வழியாக ஒரு வருடத்தில் 13 கோடி தொன் எண்ணை இதனூடாக அனுப்பமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆட்றியாட்டிக் கடல் ஓரத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இக் குழாய்த் தொடரினால் யுகோஸ்லேவியாவிற்குத் தேவையான எண்ணைகளைச் சுலபமாகப் பெறுவது மாத்திரமின்றி, ஏனைய டானுயூப் நதிக்கரை ஓர நாடுகளுக்கும், மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் ஹங்கேரிக்கும் எண்ணையினை அனுப்பமுடியும்.

பாக்கார் துறைமுகத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் எண்ணைகளைச் சேகரிப்பதற்கான பிரமாண்டமான தொட்டிகள் இருப்பதுடன் துறைமுகம் மிகவும் ஆழமாகவும் உள்ளதால் பாரமான கப்பல்கள் இங்கு நங்கூரமிட்டு எண்ணைகளை சேகரிப்புத் தொட்டிகளுக்குள் ஊற்றுவதற்கும் இலகுவாக அமைந்துள்ளது.

இந்தக் குழாய்த் தொடர் நிர்மாணம் எதிர்காலத்தில் யுகோஸ்லேவியாவின் எண்ணை உற்பத்தியின் அபிவிருத்திக்கும் மிகவும் அவசியமாகவுள்ளது. யுகோஸ்லேவியாவில் ஏனைய கைத்தொழில்களிலும் பார்க்க மோட்டார் இயந்திரங்களின் பகிரத வளர்ச்சிக்கு ஒரு வருடத்தில் இரண்டு கோடி தொன் எண்ணை இறக்குமதிசெய்யவேண்டியுள்ளது!

— க. சிவநாதன்

பெர்னாட்ஷாவின் அறிவுரைகள்

மூடனுக்கு 'மௌனமாயிரு' என்பதைவிட உயர்ந்த உபதேசம் வேறு ஒன்றுமில்லை. அதன் உண்மையை உணர்ந்துவிட்டால் அவன் மூடனாகவே இருக்கமாட்டான்.

நமக்குப் பாரமாக இருப்பவர்களை மன்னித்துவிடலாம். ஆனால் நாம் மற்றவர்களுக்குப் பாரமாயிருப்பது மன்னிக்கமுடியாத குற்றம்.

நூறுவிதமாய்க் கூறினாலும் மதம் ஒன்றே. சாதாரண மக்கள் கடவுளைப் பிரார்த்திப்பதில்லை. பிச்சைதான்கேட்பார்கள்.

தன்னைத்தானே தியாகம் செய்யும் ஒருவன் பிறரையும் தியாகம்செய்ய ஊக்குகிறான்.

கொடுமை இல்லாமலே மலே தீமை.

தொகுப்பு: எல். ரி. சிறீலங்கநாதன், மீசாலை.



கவனிக்கவும்

"முளைக்குவேலி" பகுதியும், "சோலைவனம்" துப்பறியும் தொடர்கதையும் அடுத்தவாரம் வெளியாகும்.

அன்பு

—"சிந்தனைச் செல்வன்"—

அன்பு என்பதைப்போல் பொய்யும், புலையும்நிறைந்த மொழி வேறெதுவும் கிடையாது.

— இப்ஸன்

ஃ

உலகில், மக்களின் மீது அன்பு வைப்பவன் எவனோ அவனே உண்மையில் வாழ்பவன்.

— அன்ரனி

ஃ

மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பில்லை.

— ஷேக்ஸ்பியர்

ஃ

அன்புவளர்வது ஈகையில். நன்மை செய்யவோ, இன்பம் அளிக்கவோ உள்ள ஆசையே அதன் சாரம்.

— ஏஸ்கின்

ஃ

அன்புண்டு, இரக்கம் இல்லை என்று பாசாங்கு செய்ய முடியுமா? அன்பும், இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்அல்லவா?

— ட்டைன்

ஞாபகத்திற்கு ஒரு பரீட்சை

இந்தியாவின் முதல்பெண் கவர்னர் யார்?

2 'அழகு ஆடுகிறது' எழுதியது யார்?

2. இந்தியாவின் முதல் ஜனாதிபதி யார்?

4. 'வட்டகிரி' என்றால் என்ன?

5. வயிற்றில் (இரைப்பையில்) இருக்கும் அமிலம் யாது?

6 விஞ்ஞகிரியில் உள்ள அமிலம் எது?

7. குலைக்காத நாய் எது?

2. வாசனையற்ற பூனை எது?

9. குழந்தைப் பேறு பற்றி முதலில் புத்தக எழுதியவர் யார்? எப்போது?

விடைகள்

1. சரோஜினி நாயிடு.
2. கு. இராசரவேலு.
3. டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்.
4 கேரளப் பகுதியில் உள்ள ஒரு மலைக்கோட்டை
5 ஐதரோ குளோரிக் அமிலம்
6. அசிட்டிக் அசிட்
7. 'பெசென்ஜி' சாதிநாய்
8. மனிக்க ஜாதி பூனை.
9. வென்றி வான் டென் ஹுக்சே. 1625 ல்

தொகுப்பு:- "நெல்லை க. பேரன்"

(1) டெலிகிராப் - தந்தி கண்டுபிடித்தவர்களியார்?

(2) நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

விடைகள்:

(1) காஸ், வெப்பர்

(2) ஜோர்ஜ் ஸ்டீபென்ஸன்.

விந்தையான பறவை, விலங்கினங்கள்

— சி. சண்முகலிங்கம் —

உங்களுக்குத் தெரியாத சில விலங்கினங்கள், பறவைகள் பற்றி இங்கு சுருக்கமாகத் தரப்படுகிறது. படித்துச் சுவையுங்கள்.

நீர்யானை:

இது மேற்கு ஆபிரிக்காவில் காணப்படுகின்றது. இவை சாதாரண யானைகளிலும் பார்க்க உயரத்தில் குறைவானவை. இதன் கால்களில் குளம்பு இல்லை. விரல்கள் இருக்கும். பன்றி இனத்தைச் சேர்ந்த இது தாவர உணவையே புசிக்கும்.

தாராச்சொண்டு:

ஆஸ்திரேலியாவில்காணப்படும் இது நீரில் வாழக்கூடிய எலியாகும். இதன் சொண்டு தாராவின் சொண்டுபோல அமைந்திருப்பதால் இது 'தாராச் சொண்டு' எனப் பெயர் பெறலாயிற்று. முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பதன் மூலம் தன் இனத்தை இது விருத்திசெய்கின்றது.

கடற்பசு:

அமெரிக்க ஆபிரிக்கக் கடல்களில் வாழும். இது தாவரங்களையே உண்டு வாழுகின்றது. சாதாரண பசுவிலும் பார்க்கப் பலவித்தியாச அம்சங்கள் கொண்ட இதில் மூன்று வகைகள் உண்டு.

கழுதைப் புலி:

இது இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் அதிகமாகக் காணப்படுவது. இது மிகவும் பயந்த சுபாவம்கொண்ட ஒரு காட்டு விலங்காகும். எதையும் தனிமையாக நின்று போரிட்டு கொல்லாது. சிங்கம் போன்ற மிருகங்கள் முதலியன தின்று விட்ட மிச்சமான உணவையே இது உண்ணும்.

அல்பற்றஸ்:

இது தென்கடற் பகுதிகளில் காணப்படும் பறவை. வெண்ணிறமுடையது. இது செட்டைகளை விரித்தால் ஒரு முனையிலிருந்து மற்றமுனை பன்னிரண்டு அடி நீளமாகும். பறக்கும் எல்லா வகைப் பறவைகளிலும் இதுவே பெரியது. இது தரைக்கு வராமலே பல நாட்கள் பறந்து திரியும். இதன் சட்டை ஐந்துஅங்குல நீளமிருக்கும்.

மலைஆடு:

திபெத் முதலிய மலைகளிற் காணப்படும் இதன் மறு பெயர் மார்க்கபோலோ ஆடு என்பதாம். இதன் எடை 250 இருத்தல். இதன் கொம்பு 52 அங்குல நீளமும் 15 அங்குலச் சுற்றளவும் கொண்டது.

பறக்கும் அணில்:

வட அமெரிக்கா, தென் ஆசியா முதலிய நாடுகளில் இது காணப்படுகின்றது. இது கால்களுக்கிடையில் வளர்ந்திருக்கும் சவ்வை விரித்துப் பாரசூட்டைப் போல பயன்படுத்தி மரத்திலிருந்து மரத்துக்குத் தாவுகின்றது.

யாழ்ப் பறவை:

ஆஸ்திரேலியாவில்காணப்படும் இதன் வால் இறகுகள் யாழ் போல வளைந்து இருத்தலினால் இது யாழ்ப் பறவை எனப்படுகின்றது.

சுவர்க்கப் பறவை:

இது வடகினியிலும் ஆஸ்திரேயாவிலும் காணப்படுகின்றது. இதில் பத்து இனங்கள் உண்டு காகக் ஒடும்பத்தின் இனத்தைச் சேர்ந்த இதன் இறகு பரந்து விரிந்து இருக்கின்றது.

கல்யானை:

மலாயத் தீவுகளில் காணப்படும் இதில் பல இனங்கள் உண்டு. இதன் முகமும் முன் புறமும் கருமையாகவும், முதுகும், வயிறும் வெண்மையாகவும் இருக்கும்.

தூய கணித ஒலிம்பிக் போட்டி

7,80,000 மாணவர்களில் 3-ம் இடம்



சோவியத்யூனியன், போலந்து, ஹங்கேரி, ரூமேனியா, செக்கோஸ்லோவேக்கியா, பல்கேரியா, மங்கோலியா, யுகோஸ்லேவியா, ஜெர்மனி ஆகிய உட்பட பல நாட்டு மாணவர்களுக்கிடையே நடைபெற்றதூய கணித (Mathamatics) ஒலம்பிக் போட்டிகளில் கி. ஜெர்மனியைச் சேர்ந்த 17 வயதுள்ள பாடசாலை மாணவி மொனிக்கா ரிட்ஸ் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார். (படத்தில் மத்தியில் காணப்படுகிறார்) வருடந்தோறும் நடைபெறும்இந்த 'ஒலிம்பிக்' போட்டிகளில் முதன் முதலாக கி. ஜெர்மனியிலிருந்து பங்கு பற்றி பரிசு பெற்ற மாணவி இவர்தான்.

தம்மைப்பற்றி இம் மாணவிகூறுகையில், 'பெண்களைப் பொறுத்தவரை தூய கணித பாடம் பிரச்னைக்குரிய பாடமாக இருந்ததோடு இன்னும் என்னைப்பொறுத்தவரை இந்த வாதத்தினைஏற்றுக்கொள்ள முடியாது. 7,80,000 மாணவ, மாணவிகள் கலந்துகொண்ட இந்த தூயகணிதப் போட்டிகளில் நான் வெற்றிபெற்றிருப்பது

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலை, கைப்பணிகளால் உள்ளம் புனிதமடைகிறது'

நீதியரசர் பேச்சு

நல்லூர், சனி

கலை, கைப்பணி, இன்று ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பிரதான பாடமாக இருக்கிறது என்று அறியும் போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் முற்காலத்தில் இப்படியான அழகுணர்ச்சியைத் தரக்கூடிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு இல்லை. இவ்வாறு கொழும்புத்துறை, நல்லூர் ஆசிரியகலாசாலைகளின் பொருட்காட்சியை திறந்துவைத்துப் பேசுகையில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஆசிரியர்கள் இப்படியான கலை, கைப்பணிப் பொருட்காட்சியை நடத்துவதால் மாணவர்களும் பெரியோரும் இவர்களுடைய கைத்திறனைப் பார்த்து இன்புறமுடிகிறது. இப்படியான பணிகளால் ஆசிரியர்களுடைய உள்ளம் புனிதமடைந்து அவர்களுடைய மாணவர்களும் சிறந்த பண்பினராக உதவுகிறது. இத்தகைய சமூக சிற்பிகளின் பொருட்காட்சியைத் திறந்துவைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் மலர் மாலையிட்டு வரவேற்க நல்லூர் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தமது வரவேற்புரையில் சிறுவயது முதல் கல்வியில் மாத்திரமல்ல, விளையாட்டுக்களிலும் கலைகளிலும் சிறந்து விளங்கிய நீதியரசரை இதனைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்வதில் தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானுக்கு மே. ஜேர்மனி உதவி

பொன், ஆகஸ்ட் 13

காபூல் பல்கலைக்கழகத்தின் விஸ்தரிப்பில் ஆப்கானிஸ்தானுக்கு மேற்கு ஜேர்மனி ஒத்துழைப்பு அளிக்குமென மேற்கு ஜேர்மனிய பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சு இங்கு அறிவித்துள்ளது.

(பி டி ஸி)

மாவிட்டபுரம்

கப்பல் திருவிழா விசேஷ பஸ்சேவை

மாவிட்டபுரம், சனி

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் கப்பல் திருவிழா வன்று விசேஷ பஸ் சேவை ஒன்றினை நடத்த இ. போ. ச. ஏற்பாடு செய்திருக்கிறது

இம்மாதம் 18 திகதி இரவு காங்கேசன்துறை துறைமுகக் கடற்கரையில் நடைபெறும் கப்பல் திருவிழா உற்சவம் முடிந்ததும் மாவிட்டபுரத்திலிருந்து விசேஷ பஸ்சேவை ஒன்றினை நடத்த இ. போ. ச. அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். நள்ளிரவு வரை விசேஷ பஸ் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் தேர், தீர்த்தத்தை முன்னிட்டு இம் மாதம் 15, 16 திகதிகளில் விசேஷ பஸ் சேவை வழமை போல நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் திருவிழாவில் சென்னை 'கலைமகள்' ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் கலந்துகொண்டு 'சோவிற் கடவை' என்னும் நூலை வெளியிட்டு வைப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சிறிய குடும்பம் விரும்புவோர்

பிராக், ஆகஸ்ட் 13

செக்கோஸ்லேவேக்கியாவில் பிறப்பு விகிதம் குறைந்திருப்பதும், இரண்டு குழந்தைகளுடன் கூடிய சிறிய குடும்பங்களுமே மக்களிடையேயுள்ள விருப்பமும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

(பி டி ஸி)

ரோமில் காமராஜர்

ரோமாபுரி, ஆக. 13

ரஷ்யாவிலும் இதரகிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்ட காமராஜர், நாயகம் திரும்பும் வழியில் ரோமாபுரி வந்தடைந்தார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

புதிதாக அரசாங்க சேவையில் சேர்ந்துள்ளவர்களின் (1956-ம் வருடத்துக்குப் பின்னர் சேர்ந்தவர்) சம்பள உயர்வு பதவி உயர்வு ஆகியன உத்தியோக மொழிச் சட்டம் காரணமாக பாதிக்கப்படக்கூடாது என கோரிக்கைவிடுக்கும் பிரேரணை அரசாங்க எழுதுவினைஞர் சங்க நிர்வாகக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது இது சம்பந்தமாக வழக்கொன்று தாக்கல் செய்வதுபற்றி ஆலோசிப்பதற்காக அடுத்த மாதம் முற்பகுதியில் பொதுக்கூட்டமொன்று கொழும்பில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

தற்போதைய மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதில்லை!

கிளிநொச்சி எம். பி. கவலை

கிளிநொச்சி, சனி

"ஒருகாலத்தில் பாடசாலைகள் தனிப்பட்ட முகாமையாளர்களால் கண்காணிக்கப்பட்டபோது கல்வித் திறமையும் முன்னேற்றமும் காணப்பட்டன. ஆனால் அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் பொதுமக்கள் முகாமையாளர்கள் பாடசாலையில் கவனம் செலுத்தவில்லை. இதனால் படித்தும் தொழிலில்லையே என்ற எண்ணத்தினாலும் தற்போதைய மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் அவர்களின் பிற்கால வாழ்வு சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது"

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி சென்திரேசா பாடசாலையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி பாடசாலைக் கொடியை கல்லூரிக் கீதத்துடன் எம்.பி. ஏற்றிவைத்தார்.

அவர் மேலும் பேசுகையில் "உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகளில் உங்கள் பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். எனவே அப்பாடசாலை உங்கள் பாடசாலையென மனதில் கொண்டு ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து உங்கள் பிற்கால சந்ததியினராகவும் சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் திகழவிருக்கும் உங்கள் பிள்ளைகளுக்கு போதிய கல்வியறிவை புகட்டுவதற்கு ஒத்துழைக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தலைமை ஆசிரியர் ஆண்டறிக்கையை வாசித்தார்.

மற்றும் கரைச்சிக் கிராமச் சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி, எஸ். ஆறுமுகவடிவேல் உட்பட பலரும் பேசினர். கலைநிகழ்ச்சியும் இடம்பெற்றது.

கைதடி செவிடர்- குருடர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

கைதடி, சனி

கைதடி செவிடர் குருடர் பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டிப்போட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிகாரியாதிகாரி திரு ஆர். சிதம்பரப்பிள்ளை பேசும்போது புலனிழந்த மாணவர்களின் விளையாட்டுத் திறமையும்-விழா நடைபெற்ற முறைகளும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. இத்தனை திறமையாகஇதை பயிற்றுவித்து நடத்தியஆசிரியர்களின் திறமை பாராட்டத்தக்கது. புலனிழந்த மாணவர்களுக்கு இப்பாடசாலை பல வகைகளிலும் ஆற்றி வரும்சேவை போற்றத்தக்கது" என்றுகுறிப்பிட்டார்.

போட்டியில் 179 புள்ளிகளைப் பெற்ற பச்சைஇல்லம் முதலாம் இடத்தையும் 165 புள்ளிகளைப்பெற்ற மஞ்சள் இல்லம் இரண்டாம் இடத்தையும், 149 புள்ளிகளைப் பெற்ற சிவப்பு இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன, வெற்றியீட்டிய மாணவர்கட்கு வெற்றிக்கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் திருமதி. என். சிவசிதம்பரம் வழங்கினார்.

போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:-

உயரம் பாய்தல்:

கீழ்ப்பிரிவு: வைத்தீஸ்வரன், தம்பிராசா, இரஞ்சிதமணி, பரமேஸ்வரி.

மத்தியபிரிவு: புகாரி, கௌவுஸ், கரீம், சிவனேஸ்வரி, இராஜேசுவரி, பிலோமினா.

மேற்பிரிவு: நவரெத்தினராசா, கருன்.

நீளம்பாய்தல்:-

கீழ்ப்பிரிவு: ஜெயக்குமார், இதுமாகெவ்வை,

மத்தியபிரிவு: கௌவுஸ், சிவலிங்கம், இரத்தினராசா, பக்தகௌரி, இராஜேஸ்வரி யோகேஸ்வரி.

மேற்பிரிவு: இராஜேந்திரன், நவரெத்தினராசா, கருன், லீலாவதி, பராசக்தி, சத்தியபாமா.

பரிதிவட்டம் எறிதல்:

கீழ்ப்பிரிவு: செந்தில்நாதன், துரைராசா, சதாசிவம்.

மத்தியபிரிவு: பரமானந்தன், சிவலிங்கம், அலெக்ஸ்சாந்தர்.

மேற்பிரிவு: இராஜேந்திரன், கருன், இறஸீத்தலி, அம்பிகாவதி, சத்தியபாமா, பராசக்தி.

குண்டெறிதல்: ம. பி.: பரமானந்தன், கரீம், சுசிலா யோகேஸ்வரி, சித்திராக்கனி.

மே. பி.: சிவபாதம், இராசேந்திரன், பத்மநாதன்.

100 யார் ஓட்டம்: கீ. பி. ஜெயக்குமார், உதுமாலெவ்வை.

ம. பி.: இன்மாயில், அலெக்சாந்தர், சிவலிங்கம், பக்தகௌரி, பிலோமினா, சிவனேஸ்வரி.

மே. பி.: இராசேந்திரன், சிவபாதம், பத்மநாதன், லீலாவதி, அம்பிகாவதி.

200 யார் ஓட்டம்: ம. பி இன்மாயில், அலெக்சாந்தர் கரீம்.

மே பி.: இராசேந்திரன், சிவபாதம், பத்மநாதன், பராசக்தி, லீலாவதி.

440 யார் அஞ்சலோட்டம் ஆண்கள்: மஞ்சள் இல்லம், சிவப்பு இல்லம், பச்சை இல்லம்.

பெண்கள்: பச்சை இல்லம், மஞ்சள் இல்லம், சிவப்பு இல்லம்.

கயிறு இழுத்தல் போட்டி சிவப்பு இல்லம், மஞ்சள் இல்லம், பச்சை இல்லம்.

"இருபது சதவீதமானவருக்கு மட்டுமே உயர்தரக் கல்வி"

பெற்றோர் தின விழாவில் பேச்சு

களுவாஞ்சிக்குடி, சனி

"மாணவர்கள் கலைவிழாக்களில் எப்படி கூடியகவனம் செலுத்துகிறார்களோ அப்படியே கல்வி கற்பதிலும் முன்னேற்றம் அடையபாடுபட வேண்டுமென்று பெரியபோரை தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பெற்றோர் தினவிழாவில் பேசிய பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம் இராசமாணிக்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது ஆசிரியர்களும் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பரிசோதகர் ஜனாப் ஏ. எம். மஜீத் பேசுகையில், புதிய கல்வித் திட்டத்தின்படி நூற்றுக்கு 20 சதவீதமான மாணவர்கள்தான் உயர்தரப்படிப்புக்குப்போகமுடியும், ஏனைய எண்பது சதவீதமானோருக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பெருக்கக்கூடிய கல்விதான் புகட்டப்படும். ஆகவே பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகளின் கல்வியில்கூடிய கவனம் செலுத்தி பிள்ளைகளைப்படிப்பிப்பதற்கு முன்வரவேண்டும் இக்கிராமம் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியுள்ளதென்றார்.

7,80,000 . . :

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்பாடத்தினையிட்டு மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கும் சக மாணவிகளுக்கு பெருமையளிப்பதுடன் உற்சாகமூட்டும். இப்படியான ஒலிம்பிக் போட்டிகளில்உலகில்பரந்துகிடக்கும் மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும்உதவுகிறது" என்று தெரிவிக்கிறார்.



ST. ANTHONY'S HARDWARE STORES LTD

516, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.

செற். அந்தோனிஸ் குறூப்

516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு,

கொழும்பு—10.

டெலிபோன்: 4261

4262.

"லேடன்" தயாரிப்புகள்:- LEYDEN

- பெனியன்
- ஸ்போர்ட் சேட்
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமெனஸ்

74 A, கே. கே எஸ். ரோட், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வன்னியசிங்கம் நினைவுதின விழாவுக்கு டாக்டர் தகநாயக்காவை அழைப்பர்



கோண்டாவில், சனி

அமரர் வன்னியசிங்கம் நினைவு தினத்தை இவ்வருடம் செப்டம்பர் மாதம் 17-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் இவ்விழாவுக்கு உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யு. தகநாயக்காவை அழைப்பதென்றும் தமிழரசுக்கட்சியின் கோண்டால் கிளை தீர்மானித்துள்ளது. கிளைத் தலைவர் திரு. அ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மற்றும் சில அமைச்சர்களையும் இவ்விழாவுக்கு அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மட்டுப்படுத்திய அளவுக்கு கார் இறக்குமதி

கொழும்பு, ஞாயிறு

இனி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கார் இறக்குமதி அனுமதிக்கப்படும்.

புதிய கார்கள் கோரி சொந்தச் செலவில் பதிவு செய்தவர்களுக்கு வேறு கார்களைப் பெறும்விதத்தில் லைசன்ஸ் வழங்கப்படவிருக்கிறது. இந்த வகையில் ஒருசிலருக்கு மட்டுமே லைசன்ஸ் வழங்கப்படும்.

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரி இது சம்பந்தமான தகுதி விண்ணப்பம் கோரியிருக்கிறார்.

ஒருவர் ஒரு காருக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இந்தக்கார் ரூ. 8000 பெறுமதிக்குமேல் இருக்கக்கூடாது. இந்தக் கார்களை 5 வருட பாவனைக்குப்பின் மட்டுமே விற்பனை செய்யலாம்.

வாடகை, குத்தகைஆகியவற்றுக்கு இவை, 5 வருடங்களுக்கு முன் பாவிக்கப்படக் கூடா.

விற்பனை செய்வதாய் இருந்தாலும்கூட, இலாகாவின் அத்தியட்சகரின் சம்மதத்தின்பேரிலேயே அதைச் செய்ய முடியும்.

வைத்திய சங்க வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கத்தின் 46-வது வருடாந்தக்கூட்டம் இன்று முற்பகல் யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத கல்லூரி மண்டபத்தில் திரு. ஏ. கே. குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

* * *

பரிசளிப்பு விழா

கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ணர் வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமையில் நடைபெறும். நீதியரசர் திரு. பொன். ஸ்ரீங்கந்தராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

* * *

ஆண்டுவிழா

தனங்கிழப்பு, மனற்காடு இந்துவாலிபர் சங்க இரண்டாவது ஆண்டு நிறைவு விழா மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமைமாலை திரு. நா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். சாவகச்சேரி எம். பி. திரு. வி. நவரத்தினம் உட்பட்டப்பலர் சொற்பொழிகாற்றுவர்.

யாழ்ப்பாணத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் தமிழ்ப் பிள்ளைகள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் பல உதாரணங்களோடு விரிந்துரைத்தார்.

கூட்டம் இந்த மகஜரை அங்கீகரித்ததோடு மேலும் இவ்விடயத்தில் ஆவனசெய்வதற்காக 15 அங்கத்தினர்கள் கொண்ட காரியக்குழு ஒன்றை நியமித்தது.

காரியதரிசி திரு. வி. சுப்பிரமணியத்தின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

மாணவர் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்செழு மெதடிஸ்த மிஷன் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் தலைமை ஆசிரியை செல்வி த. நல்லதம்பி தலைமையில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள முக்கியமான இடங்களைநேற்றுப் பார்வையிட்டனர். 'ஈழநாடு' காரியாலயத்துக்கும் அவர்கள் வந்தனர்.

இளம்பெண்ணை கெடுக்க முயன்றராம் இளைஞரை பொலிஸ் தேடுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேலைக்குச் சென்ற பதினைந்து வயது இளம் பெண்ணைப் பலாத்காரமாகக்கெடுக்கமுயற்சி செய்ததாக ஓர் இளைஞன் மீது புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த இளைஞரைப் பொலிசார் தேடித்திரிகின்றனர். அந்த இளைஞர் தலைமறைவாகத்திரிவதாகக் கூறப்படுகிறது.

சண்முகலிங்கம் என்ற இந்த இளைஞர், அந்தஇளம் பெண் வேலைக்குச் சென்ற சமயம், அந்தப் பெண்ணை பலாத்காரமாக தமது வீட்டுக்கு இழுத்துச்சென்று கெடுக்க முயன்றதாகவும் ஆனால் அந்தப் பெண்ணின் தாயாரும் உறவினரும் சென்று மீட்டு வந்ததாகவும் ஆனால் மீண்டும் அந்த இளைஞர் ஆயுதங்களுடன் வந்து பெண்ணை இழுத்துச்சென்று தமது வீட்டின் அறையில் பூட்டிவைத்ததாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பின்னர் பெண்ணின் உறவினர்கள் வீட்டின் கதவை உடைத்து அப்பெண்ணை மீட்டுவந்தனராம் சண்முகலிங்கம் என்ற அந்த இளைஞரை பொலிசார் தேடிவருகின்றனர்.

இப்படியும் ஒருநிலை

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி வாலையடியிலுள்ள மதகொன்றின் அருகில் அநாதரவான நிலையில் ஆண்களைப்போன்று வேஷ்டி ஷேட்டுடன் காணப்பட்ட 18 வயது இளம்பெண் ஒருவர் தனது சோக வரலாற்றைக்கூறினார்.

கொடுகாமத்தைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் இந்த இளம்பெண் இப்பகுதியில் கல்விகற்கும் இளைஞன் ஒருவரைக் காதலித்ததாகவும், தாமிருவரும் அடிக்கடி காதல் கடிதங்கள் பரிமாறிக் கொண்டதாகவும், சில மாதங்களின்பின் அவ்விளைஞர் தன்னைக் கவனிப்பதில்லையென்றும், இதுசம்பந்தமாக தமது பெற்றோர் தன்னை ஏசி விரட்டியதாகவும், பெற்றோரினால் துரத்தப்பட்டு ஒன்றும் செய்வதறியாதநிலையில் ஆண்களைப் போன்று வேடமணிந்து தொண்டமனாற்றிலிருந்து உடுப்பிட்டிக்கு கால் நடையாக வந்ததாகவும் அவரது காதலன் கல்லூரி முடிந்ததும் அல்வழியால் செல்வது வழக்கமென்றும் அதனாலேயே மதகொன்றில் இருந்ததாகவும், களைப்பினால் மயக்கமடைந்ததாகவும் அவரைச்சூழ்ந்துநின்ற பெண்களிடம் கூறினார். காதலன் தன்னை ஏற்காவிடின் தற்கொலை செய்யப்போவதாகவும் கண்ணீர் சொரிந்தபடி கூறினராம். சிலரின் முயற்சியினால் இவ்விளம்பெண் பெற்றோரிடம் சேர்ப்பிக்கப்பட்டார்.

புதிய நிர்வாகிகள்

மல்லாவி, சனி

வன்னிவிழாங்குள அன்னதான சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. இதில் தலைவராக திரு. ச. அருளம்பலமும், செயலாளராக திரு. எஸ். கதிர்காமத்தம்பியும் தனாதிகாரியாக திரு. ஆ. நடராசாவும், கணக்குப் பரிசோதகர்களாக திரு. கு. சிவஞானசண்முகமும், திரு. பொ. சபாரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தானையடி ராணுவ தாக்குதல் வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தானையடி இராணுவ தாக்குதல் வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி வி. எம் குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும்ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 64-ம்ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி தானையடியில் டபிள்யு. எம். கருணாரத்ன, ஜோன் மைக்கல் பசனுபக்கா, அமரசிங்கா டி சில்வா, சவான் பரீத் சிடீன் ஆகியோர், மரியாம்பிள்ளைபெனடிற், அன்ரனி செபமாலை பிலிப், ஜோசப் சின்னப்பு மரியாம்பிள்ளை, சூசை அன்ரனி செபமாலை பிலிப்பு பேதுருப்பிள்ளை ஆகியோரின் இல்லங்களை நாசமாக்கி சேதம் விளைவித்ததாகவும், சிலருக்கு அடித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் 3 ஜீப்களில் சம்பவம் நடந்ததினம் துப்பாக்கி பொல்லுகளுடன் வந்து, சிலரைத்தாக்கி வீடுகளுக்குத் தீ மூட்டினார்கள் என்று சாட்சியத்தின்போது கூறப்பட்டது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் புறக்டர் கே பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் ஆஜராகினார், முடிக்குரிய தரப்பில் ஆட்வகேட் ஏ ஏ டி சில்வா ஆஜராகினார்.

விசாரணையின் பின் நீதிபதி வழக்கை செப்டம்பர் 9-ந் தேதிவரை ஒத்திவைத்தார்.

அட்டர்ணி ஜெனரல் பற்றி கேள்வி

கொழும்பு, சனி

"வழக்கறிஞராகத் தொழில் புரிந்த சமயத்தில் எதிரிக்காக, வேதனத்துக்கோ, சன்மானத்துக்கோ முன்னர் விசாரணையின் போது ஆஜரானவர் இப்பொழுது அட்டர்ணி ஜெனராக இருக்கையில் குற்றஞ் சாட்டப்பட்ட அந்த வழக்கை வாபஸ்பெறச் செய்வது முறையானதா?

உடுகம எம்.பி. திரு. நீல்டி அல்விஸ் உதவி நீதியமைச்சரைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகளில் இது ஒன்று ஜனப்பிரதிநிதிகள் சபை இம்மாதம் 20-ந் திகதி கூடும் பொழுது திரு. நீல்டி அல்விஸ் பின்வரும் கேள்விகளையும் கேட்பார்".

காலி மாஜிஸ்டிரேட் கோர்ட் 32442 இலக்கவழக்கில் விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்ட எதிரி கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டவரென்பதை உதவி மந்திரி அறிவாரா? முன்னாள் அட்டர்ணி ஜெனரலுக்கு இந்த எதிரி சார்பில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டதல்லவா? எதிரிசார்பில் அட்வகேட் ஏ எல் எம். அமீர், புறக்டர் கனிக்காடி சொய்சாவின் அனுசரணையுடன் ஆஜராகி வாதாடியதல்லவா? இந்தவழக்கு சுப்ரீம்கோர்ட் விசாரணைப் பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய அவசியமில்லையென இவ்வருடம் ஜூலை 18-ம் திகதி முடிக்குரிய வழக்கறிஞர் தெரிவித்தாரல்லவா? இது இப்போது சுப்பிரீம் கோர்ட் வழக்கு விசாரணையில்இல்லையென்பதை உதவி மந்திரி அறிவாரா?

யாழ். அரசாங்க அதிபரின் கடமை ஆர்வம்

பிரதிநிதிகள் சபையில் நல்லூர் எம். பி. பாராட்டு

கொழும்பு, சனி

நல்லூர் எம் பி டாக்டர் ஈ எம் வி நாகநாதன் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகராவுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திரு வேர்ணன் அபயசேகரா போன்று இன்னும் சிலர் இருந்தால் போதும் என்று அவர் சொன்னார்.

காலை 9 மணியாக 15 நிமிடங்களுக்குமுன்னரே திரு அபயசேகரா காரியாலயத்துக்கு வேலைசெய்ய வந்துவிடுவாரென்றும் மாலையில் வேலைமுடிந்து போகும் பொழுது எந்தவேலையையும் பாக்கிவைக்காததுடன் தமது சகஊழியர்களின் பிரச்னைகள், வேலைகள்பற்றியும் விசாரித்தறிந்து ஆவன செய்கிறாரென்றும் டாக்டர் நாகநாதன் சொன்னார்.

திரு. அபயசேகரா போன்றவர்கள்தான் நமது நாட்டுக்குத் தேவை" என்று அவர் கூறினார்.

"நாட்டுக்காக உழைக்கவும்; நாட்டுக்காகத் தியாகம்செய்யக்கூடியவர்களுமே நமக்குத் தேவை. இல்லையெனில் நாடுமுன்னேற முடியாது" என்று டாக்டர் நாகநாதன் சொன்னார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்களை அதன் ஆரம்பித்ததிட்டங்களை முடியுமானால்தடைசெய்து பாருங்கள் என்று எதிர்க்கட்சியினருக்கு நாகநாதன் சவால் விட்டார். எதிர்க்கட்சியினரின், இடதுசாரியினரின்திட்டங்களை அரசாங்கம் முறியடித்துவிடும் என்றும்அவர் கூறினார்.

விவசாயத்தை விருத்திசெய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அதேசமயம் கைத்தொழில் விருத்தியிலும் அக்கறை செலுத்தவேண்டும் டாக்டர் நாகநாதன் கூறினார்.

புதிய கட்டிடங்கள்

மல்லாவி, சனி

மல்லாவி வைத்தியசாலைக்கென ஐந்து புதிய கட்டிடங்களை மாங்குளம் காணி அபிவிருத்திப் பகுதியினர் அமைக்கின்றனர். இதில் ஒரு கட்டிடம் வைத்திய அதிகாரிக்கும் மற்றும் 4 கட்டிடங்களும் தாதிமாருக்கும் அமைக்கப்படுகின்றனவாம்.

அரசாங்க நன்கொடையுடன் பாரதி, கல்விளான், ஸ்ரீபாலசுப்பிரமணியர் என்னும் மூன்று கிராமமுன்னேற்றச் சங்கங்களும் தனித்தனி ஒவ்வொரு நிரந்தரக்கட்டிடங்களை அமைத்துவருகிறார்கள். இக்கட்டிடங்கள் இன்னும் சில நாட்களுக்குள் திறந்துவைக்கப்படவுள்ளன.

இந்தியாவுக்கு சிங்கப்பூர் பிரதமர்

புதுடில்லி, ஆகஸ்ட் 13

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ. குவான்யென் இன்னும் மூன்று வாரங்களில் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென இந்திய வெளிவிவகார மந்திரி, சர்தார் சுவரண்சிங் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

(பி. டி. ஸி.)

திருமணம்

ஜெகநாதன் — லலிதா

எங்கள் மகன் ஜெகநாதனுக்கும் லலிதா தம்பிஐயாவுக்கும் இம்மாதம் 19-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு நல்லூர் செட்டித் தெருவில் 20 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும். திருமணவைபவத்துக்கு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை என்றும் அறிவிக்கிறோம்.

பொ. தியாகராஜா தம்பதிகள். 310 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

844

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் விநாயகத்தாரால் யாழ்ப்பாணம் கொண்டோவில் மேலை வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org